வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 23.08.2021 திங்கட்கிழமை | இதழ் : 262 | பக்கங்கள் : 16




- பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல்
- அரசியல் கைதிகள் விடுதலை
- திட்டமிட்ட காணி அபகரிப்பை நிறுத்துதல்
- 13ஐ முற்றாக நடைமுறைப்படுத்தல்

# 4 விடயங்களில் ஒருமித்து செயலாற்ற தமிழ் கட்சிகளின் தலைவர்கள் முடிவு

## நேற்று மூன்றரை மணி நேரம் இணைய வழியில் சந்திப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 23

தமிழ் மக்களின் அரசியல் விடயங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயல்படுவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று மெய்நிகர் வழியின் ஊடாக சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர். மூன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நான்கு விடயங்களில் ஒருமித்து செயலாற்றுவதற்கு இணக்கம் காணப்பட்டுள் ளது. 15



## யாழில் தொற்றால் இருவர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 23

கொரோனா தொற்றால் நேற்றும் யாழ்ப்பாணத்தில் இருவர் உயிரிழந்தனர்.

யாழ். போதனா மருத்துவ மனையின் ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட பரிசோதனை யிலேயே இவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ். போதனா மருத்துவ மனை ஊடாக மாதிரி அனுப் பப்பட்ட 65 வயது ஆண் ஒருவர் தொற்றால் உயிரிழந் தார்.

இதேபோன்று, பருத்தித் துறை ஆதார மருத்துவமனை ஊடாக மாதிரி அனுப்பப்பட்ட 62 வயது ஆண் ஒருவரும் தொற்றுக்கு உள்ளாகி இறந் தார். (ஐ)

## வடக்கில் 89 தொற்றாளர் யாழ்ப்பாணத்தில் 64 பேர்

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணத்தில் 64 பேர் உட்பட வடக்கில் 89 தொற்றா ளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் 618 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 15

## 4 டெல்டா திரிபுகள் நாட்டில் பரவுகின்றன!

### பேராசிரியர் நீலிகா மாளவிகே



கொழும்பு, ஓக. 23

நாட்டில் நான்கு வகையான டெல்டா திரிபுகள் பரவுகின்றன. இதில் ஒன்று, A222V. இது பல நாடு களில் பரவி வருகின்றது. மற்றொன்று, A1078S இலங்கை மற்றும் மலேசியாவில் பரவுகின்றது. மற்றைய இரு A701S, R24C 15

## 107 ஆண்கள் உள்ளிட்ட மேலும் 183 பேர் மரணம்

கொழும்பு, ஓக. 23

நாட்டில் மேலும் 183 பேர் கொரோனா வைரஸ் தொற் றால் உயிரிழந்தனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித் துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணித்தவர்களில் 107 ஆண்களும், 76 பெண் களும் உள்ளடங்குகின் 15

## குருநகரில் வாள்வெட்டு; 3 இளைஞர்கள் படுகாயம்!

### ஊரடங்கு வேளையில் நேற்று பயங்கரம்

யாழ்ப்பாணம், ஒக். 23

ஊரடங்கு சட்டம் நடை முறையிலிருக்கும் நிலையில், குருநகரில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் மூன்று இளைஞர்கள் படுகாயங்களுக்கு இலக்காகினர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் புறநகர 15



## வான் - மோ. சைக்கிள் விபத்து கிளிநொச்சியில் ஒருவர் பலி!

### மற்றொருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஓக. 23

மோட்டார் சைக்கிளும் டொல்பின் ரக வானும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்து நேற்று மாலை கிளிநொச்சி 155ஆம் கட்டை பகுதி யில் இடம்பெற்றுள்ளது. 15

## 2000 ரூபாய் கொடுப்பனவுக்கு யாழில் 57,000 குடும்பங்கள் தகுதி

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

நாடு முடக்கப்பட்டதால் வாழ்வாதாரத்தை இழந்தவர் களுக்கு அரசாங்கம் வழங்கும் 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை பெற யாழ்ப்பாணத்தில் 57 ஆயி ரம் குடும்பங்கள் தகுதி பெற் றுள்ளன.

இந்தத் தகவலை யாழ். மாவட்ட அர 15

## முதல் தடவையாக 4,000ஐ தாண்டியது நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கை

கொழும்பு, ஓக. 23

நாட்டில் நாளாந்தக் கொரோ னாத் தொற்றாளர்களின் எண் ணிக்கை முதல் தடவையாக 4 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

கொரோனாத் தொற்று உறுதியான 4 ஆயிரத்து 282 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள் ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறு திப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 90 ஆயிர மாக ஆக அதிகரித்துள் 15

## இப்படியும் நடக்கிறது...!

பிரபல நாவலாசிரியர், ஜோர்ஜ் மூர் ஒரு சிறந்த மேதை. அவருக்கு இளமையில் கர்வம் மிகுதியாக இருந்தது. அவர் ஒருநாள், டப்ளின் நகர ஆயராக இருந்த டாக்டர் வால்ஷ் என்பவருக்கு கடிதம் ஒன்றை எழுதினார்.

அந்தக் கடிதத்தில் அவர்,"அன்பார்ந்த ஆயர் அவர்களே, உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? நான் கிறிஸ்தவ மதத்தை விட்டுவிட்டேன்", என்று எழுதியிருந்தாராம்.

அதற்கு பதில் எழுதிய ஆயர் அவர்கள்,

ஒரு பசுவின் வால் நுனியில் ஈ உட்கார்ந்த கதை உங்களுக்குத் தெரியுமா? "பசுவே நான் போய் வருகிறேன்" என ஈ கூறியதாம். அப்போது பசு தன் வால் பக்கம் திரும்பி, "நீ இவ்வளவு நேரம் இங்கே இருந்ததே எனக்குத் தெரியாதே!" என்று பதில் சொல்லியதாம் என்று எழுதியிருந்தார்.

கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையே பேச்சு நடைபெறவிருப்பது குறித்தும், அதன் முன்னோட்டமாக சுமந்திரனுக்கும் பேராசிரியர் பீரிஸிற்குமிடையே நடைபெற்ற பேச்சு குறித்தும் இந்தப் பத்தியில் பல தடவைகள் எழுதியாகிவிட்டது.

பேச்சுக்கு அழைத்தவுடன் கூட்டமைப்பு ஓடி வந்து விடும் என்று அரசோ அல்லது வேறுதரப்புக்களோ கருதுவது வேடிக்கையானது என்று கேட்டு ரெலோ அறிக்கை வெளியிட்டிருந்தது குறித்தும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

இந்த அறிக்கையை வெளியிட்டவர், ரெலோவுக்கு புதியவரவாக வந்த குருசுவாமி சுரேந்திரன். கட்சியின் பேச்சாளராக அவர் நியமிக்கப்பட்ட பின்னர்தான் ரெலோ இப்படி சில விடயங்கள் குறித்து அறிக்கைகளை விடுத்து வருகின்றது. அதிகம் ஏன், இணையவழியில் தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைக்கின்ற முயற்சி நடந்தபோதே இது, ரெலோவின் பாணி இல்லையே என்றே பலரும் முணுமுணுத்தனர்.

அவரைப் பொறுத்தவரை எந்தப் பதவியிலும் இல்லை. அவருக்கு தேவையானது தனது "திறமைகளை" வெளிச்சம் போடவேண்டும் என்பதே. ஆனால், இவ்வாறு வீர வசனம் பேசுவது பொல்லைக்கொடுத்து அடிவாங்குவது போல ஆகிவிடும் என்பதை அவர் அறிந்துகொள்ள இன்னும் அனுபவம் தேவை.

நிபந்தனை இல்லாமல் கூட்டமைப்பு அரசுடன் பேசாது என்று கூறிய ரெலோவும் அதன் தலைவர் செல்வமும், தாங்கள் கூட்டமைப்பில்தான் இருக்கிறோம் என்பதை இவ்வாறு அடிக்கடி அறிக்கைகள் விடுவதன் மூலம் மக்களுக்கு ஞாபகப்படுத்தி வருவது வழமையானதுதான்.

ஆனால், இப்படி அறிக்கை விடுத்து ஒருசில நாட்களே ஆகிய நிலையில் இப்போது செல்வம் புதிய அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கிறார்.

அதாவது, கூட்டமைப்புக்கும் அரசாங்கத்திற்குமிடையே பேச்சு நடந்துதான் வருகின்றது. ஆனால், இரகசிய உடன்பாடு எதுவும் அரசுடன் இல்லை என்று தெரிவித்திருக்கின்றார்.

கூட்டமைப்பில்தான் இருக்கிறோம் என்பதை இவ்வாறு இடையிடையே ரெலோ சொல்லிக்கொண்டிருந்தாலும், பசுவின் வாலில் ஈ இருப்பதுபோலத்தான் இருந்துகொண்டிருக்கின்றது.

ஈ ஆவது போகும்போது சொல்லிவிட்டு போனது. ஆனால், ரெலோ போகிறேன் போகிறேன் என்று சொன்னாலும் பறந்துவிடாது என்பதும் பசுவுக்கு நன்கு தெரியும்.!

**- ஊர்க்குருவி**

# வவுனியாவில் தொற்றால் இருவர் பலி!

வவுனியா, ஓக. 23

வவுனியாவில் கொரோனா தொற்றால் இருவர் நேற்று மரணமடைந்தனர்.

வவுனியா மதவுவைத்தகுளம் கொரோனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த சிப்பிகுளத்தை சேர்ந்த நபர் தொற்றால் உயிரிழந்தார்.

இதேபோன்று, வவுனியா தோணிக்கல் பகுதியை சேர்ந்த ஒருவர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவருக்கு நடத்தப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்றியிருந்ததை உறுதிப்படுத்தப்பட்டது. அவர் வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சாவடைந்தார். (ஐ)

## ஊரடங்கைமீறி வியபாரம் ஆறு வர்த்தகர்கள் தனிமை!



வவுனியா, ஓக. 23

வவுனியாவில் ஊரடங்கு சட்டத்தைமீறி வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபட்ட ஆறு பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

கோவிட் 19 தொற்றை கட்டுப்படுத்த எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று வவுனியா மொத்த மரக்கறி விற்பனை நிலையம் மற்றும் நகரப் பகுதிகளில் ஆறு வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதனை அவதானித்த சுகாதார பிரிவினரும், பொலிஸாரும் அவர்களின் வர்த்தக நிலையங்களை மூடியதுடன். அவர்கள் அனைவரையும் கட்டாய தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தினர். (ஐ)

## தடுப்பூசி பெறாத முதியவர்கள் இன்று முதல் பெற்றுகொள்ளலாம்!

கொழும்பு, ஓக. 23

தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளாத 60 வயதைக் கடந்த முதியவர்களுக்காக, இன்று திங்கட்கிழமை முதல் பெற முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதற்காக அடுத்த வாரத்தை தடுப்பூசி வாரமாக அரசாங்கம் அறிவித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

60 வயதை கடந்த 27 இலட்சத்து 50 ஆயிரம் பேர் ஒரு டோஸைக்கூட இதுவரையில் செலுத்திக் கொள்ளவில்லை. தவறான கருத்துக்களாலும், தனிப்பட்ட காரணங்களாலும் சிலர் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளவில்லை. இதுவே கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கவும் காரணம் எனவும் தெரிவித்தார். (ஐ)

## சம்பளத்தை வழங்குகிறார் அமைச்சர் சிசிர ஜயக்கொடி

கொழும்பு, ஓக. 23

தனது ஓகஸ்ட் மாத சம்பளத்தை முழுமையாக கோவிட் -19 கட்டுப்பாட்டு நிதியத்துக்கு நன்கொடையாக வழங்கவுள்ளாரென சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி அறிவித்துள்ளார்.

கோவிட் தொற்றுநோயை எதிர்கொள்ளும் மக்களின் அவல நிலையை கருத்தில் கொண்டு தனது ஓகஸ்ட் மாத சம்பளத்தை நன்கொடையாக வழங்க முடிவு செய்தாரென அவர் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் குமாரி வீரசேகரவுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

### கல்வி TV CHANNEL-1

**23.08.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி TV CHANNEL - 2

**23.08.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu — 23.08.2021 திங்கட்கிழமை

பிலவ வருடம், ஆவணி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

## ஆப்கானிஸ்தான் தரும் படிப்பினை?

இன்றைய ஈழத் தமிழர் அரசியல் என்பது, சந்தேகமில்லாமல் வெளியாரின் தலையீடுகளை வேண்டி நிற்கும் அரசியலாகும். வெளியார் என்பதற்குள் இந்தியா, அமெரிக்கா, பிரத்தானியா, கனடா ஆகிய நாடுகளிலிருந்து, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வரையில் அடங்கும். மனித உரிமைகள் பேரவை போன்ற அமைப்புகளுக்கு ஓர் உலகாளாவிய முகம் இருந்தாலும்கூட, அவையும் வெளியாரின் அமைப்புகள்தான். நாடுகளின் வெளிவிவகார நலன்களிலிருந்துதான் அங்கும் இறுதி முடிவுகள் எடுக்கப்படும். 2012இலிருந்து இலங்கையின்மீது நிறைவேற்றப்பட்ட சகல பிரேரணைகளின் உள்ளடக்கம் மற்றும் அவற்றை அமுல்படுத்துவதற்காக கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கினால், நாடுகளின் விருப்பு, வெறுப்புகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை நாம் தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

ஆனால், 2009 இற்கு முன்னரான அரசியல் என்பது வெளியாரில் தங்கியிருக்கவில்லை. அப்போது முழுக்க முழுக்க தமிழரின் சொந்த பலம் தொடர்பில் மட்டுமே சிந்திக்கப்பட்டது. இந்தியாவையோ அமெரிக்காவையோ அல்ல எந்தவொரு சர்வதேச அமைப்புகள் மீதான நம்பிக்கையின் அடிப்படையிலும் அன்றைய அரசியல் முன்னெடுக்கப்படவில்லை. ஒருவேளை வெளித் தரப்புக்களை நம்பியிருந்தால் நிச்சயம் மீண்டும் ஒரு யுத்தம் இடம்பெற்றிருக்காது. தங்கள் சொந்த பலத்தின் மீதான நம்பிக்கையின் அடிப்படையில்தான், எவரையும் எதிர்த்தும் தங்களால் நிற்க முடியுமென்னும் நம்பிக்கை உருவாகியது.

ஆனால், 2009இற்கு பின்னரான அரசியல் என்பது முற்றிலும் வெளியாருக்காகக் காத்திருக்கும் ஒன்று. இதில் எந்த கட்சியும் புனிதமானவை அல்ல. பயன்படுத்தும் வார்த்தை பிரயோகங்களில் மட்டும்தான் வித்தியாசம் தெரிகின்றது. உதாரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச அழுத்தம் என்று குறிப்பிடும் போது, தமிழ்த் தேசிய முன்னணியினரோ பாதுகாப்பு பேரவை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்பார்கள். விக்னேஸ்வரனின் அணியும் அவற்றையே பிரதி செய்து கூறும். அடிப்படையில் இவைகள் அனைத்துமே வெளியார் தொடர்பானதுதான். இந்த விடயங்கள் நடக்க வேண்டுமாயின் அதற்கு பிராந்திய சர்வதேச சக்திகளின் ஆசீர்வாதம் வேண்டும். இதில் தமிழர்கள் எந்த வியூகம் வகுத்தும் எதுவும் நடக்கப் போவதில்லை. ஏனெனில், விடயங்கள் எவையும் தமிழர்களின் கையில் இல்லை.

ஆனால், சர்வதேச சக்திகள் எவ்வாறு செயல்படும் என்பதற்கு வரலாற்றில் ஏராளமான உதாரணங்கள் உண்டு. இதில் ஆப்கானிஸ்தான் ஒரு புதிய உதாரணம். 20 வருடங்களுக்கு பின்னர் அமெரிக்க படைகள் வெளியேறியமையைத் தொடர்ந்து, அமெரிக்காவை நம்பியிருந்த ஆப்கானியர்கள் வீதியில் விடப்பட்டிருக்கின்றனர். இது பற்றிய விமர்சனங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி பைடன் ஒரு வரியில் பதலளித்திருக்கின்றார். "நாங்கள் ஆப்கானிஸ்தானுக்குள் சென்றது, ஆப்கானிஸ்தானை கட்டியெழுப்புவதற்கு அல்ல. அமெரிக்காவின் பாதுகாப்பின் மீதான அச்சுறுத்தல்களை இல்லாமலாக்கவே அமெரிக்க படைகள் அங்கு சென்றன. இனியும் இந்த யுத்தத்தை தொடர்வதில் அமெரிக்காவிற்கு எந்த பயனும் இல்லை. ஆப்கானியர்களால் அவர்களின் தேசத்திற்காக போராட முடியாவிட்டால் அமெரிக்கர்கள் என்ன செய்ய முடியும்?", தர்க்கரீதியில் இந்த பதில் மிகவும் சரியானது. ஏனெனில், அமெரிக்க அதிபர் கூறுவது உண்மை. இதனை விளங்கிக் கொண்டு செயல்பட்டிருக்க வேண்டியது யார்? ஆப்கானியர்களா அல்லது அமெரிக்கர்களா?

ஒரு நாட்டின் மீதான சர்வதேச தலையீடுகள் மற்றும் அழுத்தங்கள் என்பவை நிரந்தரமானவையல்ல என்பதற்கு இது ஒரு மிகச் சிறந்த உதாரணம். எனவே, "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது" எப்படி என்பதை தேவையுள்ள மக்கள்தான் சிந்திக்க வேண்டும். வாய்ப்புக்கள் கிடைக்கின்றபோது அதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது கொஞ்சமா அல்லது கூடுதலா என்பது தொடர்பில் விவாதம் செய்து கொண்டிருக்கக்கூடாது. ஏனெனில், காற்று தொடர்ந்தும் வீசிக் கொண்டிருக்காது.

# வல்லரசுகளால் உருக்குலைந்த அழகிய ஆப்கானிஸ்தான் !

- அலசுவது இராஜதந்திரி -


1963 இல் காபூல் நகர பெண்கள்

இன்று முழு உலகின் கவனத்தையும் பெற்று சின்னாபின்னாமாகியுள்ள தேசமாகவே ஆப்கானிஸ்தான் விளங்குகின்றது. ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்துள்ள விமானநிலையத்தை சூழவுள்ள இரும்பு வேலிக்கம்பிகளை இறுகப்பிடித்தவாறு, "தலிபான்கள் வருகிறார்கள் எங்களைக் காப்பாற்றுங்கள்", என்று விமான நிலைய சுற்றாடலில் நிற்கின்ற அமெரிக்க படையினரை நோக்கி கதறி அழும் காட்சி எந்தவொரு கல் நெஞ்சத்தையும் உருகவைப்பதாக இருக்கின்றது.

ஆனால், மத்திய ஆசியாவில் மிகப் பெறுமதிமிக்க கனிமப்பொருள் வளத்தைக் கொண்டுள்ள ஆப்கானிஸ்தான், கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக உலக வல்லரசுகளான அன்றைய சோவியத் ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் வல்லாதிக்க போட்டிக்கு உள்ளாக்கி அந்த நாடு சீரழித்து விடப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட ஆப்கானிஸ்தான் விரலில் மூக்கை வைக்குமளவுக்கு மிச்சிறப்பான நாகரிகத்தை கொண்டிருந்தது. ஆப்கானிஸ்தான் பெண்களின் உரிமைகள் இன்று தலிபான்களால் மறுக்கப்பட்டுள்ளன. பெண்கள் தொழில்புரிவது மற்றும் கல்வி கற்பது போன்றவையெல்லாம் தலிபான்களால் மறுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆப்கானிஸ்தான் பெண்கள் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கல்வியில் மேம்பட்டவர்களாகவும் நடை, உடை, பாவனை என்பவற்றில் மேற்கத்தேய பெண்களுக்கு சமமானவர்களாகவும் விளங்கியிருந்தனர்.

**1919ஆம் ஆண்டில்
பெண்களுக்கு வாக்குரிமை**

ஏனைய இஸ்லாமிய நாடுகளைப் போலன்றி 1919ஆம் ஆண்டிலேயே ஆப்கானிஸ்தான் பெண்கள் வாக்களிக்கும் உரிமையைக்கொண்டிருந்தனர். இங்கிலாந்து சென்று கல்வி கற்று சிறந்த கல்வி, தொழில் தகைமைகளையும் ஆப்கானிஸ்தான் பெண்கள் பெற்றிருந்தனர்.

ஆப்கானிஸ்தான் பெண்கள் அரசியலிலும் இறங்கியிருந்தனர். அனாஹிட்டா ரேட்ஸாட் என்ற பெண்மணி 1965ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் பாராளுமன்றுக்கு தெரிவான முதல் பெண்மணியாக விளங்கினார். 1965ஆம் ஆண்டிலேயே பெண்கள் உரிமைகளுக்கான ஜனநாயக அமைப்பு ஆப்கானிஸ்தானில் உருவாக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் ஆப்கானிஸ்தானில் பல பெண்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தனர்.

1970ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானின் காபூல் பல்கலைக்கழகத்தில் இருந்த மாணவர்களில் 70 வீதமானவர்கள் பெண்களாவர். 1960ஆம்-1970ஆம் ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானில் வெளிநாடுகள் வர்த்தக முதலீடுகளை மேற்கொண்டிருந்தன. இதன் காரணமாக ஆப்கானிஸ்தான் வானுயர்ந்த கட்டுமானங்களுடன் வியக்கத்தக்க விதத்தில் வளர்ச்சிப்பாதையை எட்டியிருந்தது.

**உல்லாசபுரி**

உல்லாச பயணத்துறையும் நல்ல முறையில் ஆப்கானிஸ்தானில் வளர்ச்சி காண ஆரம்பித்திருந்தது. மத்திய ஆசியாவின் அழகிய உயர்ந்த மலைச்சாரல்கள், அபூர்வமான கட்டடக்கலை அம்சங்களை கொண்ட புராதனமான கட்டடங்கள் என்பவற்றோடு மலைக்குன்றுகளில் செதுக்கப்பட்ட உயரமான புத்தர் சிலைகள் என்பவையும் ஆப்கானிஸ்தானை கலையம்சத்தோடு கூடிய உல்லாசபுரியாக உருமாற்றியிருந்தன.

இவைதவிர, நன்கு வடிவமைக்கப்பட்ட அழகிய பூங்காக்களும் ஆப்கானிஸ்தானில் காணப்பட்டன. மேற்கத்தேய நாட்டு உல்லாசப் பயணிகளின் பயணக்குறிப்புகளில் ஆப்கானிஸ்தான் மக்கள் விருந்தோம்பலில் மிக உயர்வானவர்களாகவும் வாஞ்சையோடு மனமுவந்து பழகக்கூடியவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் ஆப்கானிஸ்தானின் வளர்ச்சி 1970ஆம் ஆண்டுகளில் படிப்படியாக தளர்வடைய ஆரம்பித்தது. இஸ்லாமிய அடிப்படை வாதத்தை மையப்படுத்தியதாக உள்நாட்டு அரசியல் கலகங்கள், புரட்சிகள் என்பவை ஆப்கானிஸ்தானில் முளைவிட ஆரம்பித்திருந்தன. ஆப்கானிஸ்தானியர்கள் 1963ஆம் ஆண்டுக்கும் 1973ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட பத்து வருட காலப்பகுதியை ஒரு "பொற்காலம்" என்று இன்றுவரை வர்ணிக்கின்றார்கள்.

ஆனால், கடந்த இருபது வருட காலமாக அமெரிக்காவின் பிடியில் இருந்த ஆப்கானிஸ்தான் தற்போது தலிபான்களின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளது. இதன்காரணமாக கடந்த இரு தசாப்த காலமாக மேற்கத்தேய கலாசாரத்தின் பக்கமே வயப்பட்டிருந்த ஆப்கானிஸ்தான் தற்போது இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கொள்கைகளுக்கமைவாக இயங்க வேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாகியுள்ளது.

தலிபான்களின் கட்டுப்பாடுகள் படிப்படியாக ஆப்கானிஸ்தானில் இறுகிவரும் தருணத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய ஆசியாவில் ஓர் உல்லாசபுரியாக இருந்த ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. ■

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒகஸ்ட் - 23 திங்கட்கிழமை
பிலவ வருடம் - ஆவணி 07

நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : பிரதமை



## இன்றைய ராசிபலன்

**23.08.2021**

**மேடம்**
தாய்வழி உறவினரிடம் இருந்து நல்ல செய்தி ஒன்று வரும். பங்குச் சந்தையில் முன்பு செய்த முதலீடுகள் இலாபம் தரும். புகழ் பெறுவீர்கள். சிரமமும் சந்தோஷமும் கலந்திருக்கும்.

**இடபம்**
வாழ்க்கைத்துணையின் சகோதரர் உங்களுக்கு உதவி செய்வார். சாப்பிடவும், தூங்கவும் நேரமின்றி உழைக்க வேண்டி வரும். பிரியமானவர்களோடு இத்தனை நாள் இருந்த பிரச்னைகள் அகலும்.

**மிதுனம்**
குடும்பத்தில் இருந்து வந்த பணத்தேவை சரியாகும். உறவினர்கள் வீட்டு சுபநிகழ்ச்சி பற்றிய செய்தி வரும். எதிர்பார்த்தவை நடக்காதது பற்றி விரக்தி நிலை தேவையில்லை.

**கடகம்**
நகைச்சுவை என்ற பெயரில் யாரையும் புண்படுத்த வேண்டாம். பிரச்னை பற்றி புலம்ப வேண்டாம். மிக விரைவில் மீளுவீர்கள். மற்றவர்கள் பிரச்னையில் தலையிட்டு அதைச் சரிசெய்வீர்கள்.

**சிம்மம்**
உங்கள் நடவடிக்கையால் ஏற்பட்டிருந்த சிரமங்கள் நீங்கும். குடும்பத்தில் நிகழும் குதூகல சம்பவம் மகிழ்ச்சி தரும். நீண்ட நாளைய எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**கன்னி**
பிரச்னையாகும் என்று நினைத்த விஷயத்தில் நலம் ஏற்படும். வாழ்வில் நல்ல நிலையை அடைவதற்கான சந்தர்ப்பம் கூடிவரும். சண்டையிட்ட உறவினர் மனம் மாறி சமாதானம் ஆவார்கள்.

**துலாம்**
அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயமும் உங்களுக்கு உண்டு. சிறு ஆரோக்கிய தொல்லை வந்து சரியாகும். கவலைகள் குறையும். பயம் நீங்கும். எதிர்பாராத சந்திப்பால் சந்தோஷம் வரும்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட விஷயம் ஒன்றில் சிறு மாற்றங்களைச் செய்வீர்கள். உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். உங்களின் புகழ் அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதி மீளும்.

**தனுசு**
குடும்பம் மகிழும். முதலீடுகளை நன்கு ஆராய்ந்து செய்யவும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்களிடம் விட்டுகொடுத்து போவீர்கள். மற்றவர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். பொறாமையை விடுங்கள்.

**மகரம்**
மற்றவர்களின் விமர்சனத்தைப் புறந்தள்ளி முன்னேறுங்கள். கரைந்த சேமிப்பை ஈடுகட்டுவீர்கள். மனச்சோர்வு நீங்கும். முன்னேறும் எண் ணம் தோன்றும். நிதி நிலையில் மாற்றம் இல்லை.

**கும்பம்**
கட்டடப்பணியில் சிறு தடை ஏற்படக்கூடும். கவலை வேண்டாம். உங்கள் மீது பெரியவர்களுக்கு இருந்து வந்த கோபம் குறையும். பிள்ளைகளிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வரும்.

**மீனம்**
புதிய முயற்சிகளில் தாமதமான வெற்றி கிடைக்கும். இடமாற்றத்திற்கான வாய்ப்புகள் இப்போதைக்கு இல்லை. பணியிடத்தில் பணிவாக இருப்பதால் நற்பெயர் கிடைக்கும்.

# நளினி - முருகன் 4 மாதங்களுக்கு பின் வேலூர் பெண்கள் சிறையில் சந்திப்பு



வேலூர், ஒக. 23

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள்தண்டனை பெற்ற முருகன் அவருடைய மனைவி நளினி ஆகியோர் 4 மாதங்களுக்கு பின்னர் வேலூர் பெண்கள் சிறையில் நேற்று காலை சந்திந்துப் பேசியுள்ளனர்.

வேலூரில் தனித்தனி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இருவரும், நீதிமன்ற உத்தரவுப்படி 15 நாட்களுக்கு ஒருமுறை நேரில் சந்தித்து பேசி வந்தனர். இருந்தபோதிலும், கொரோனா தொற்று காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் கைதிகளை குடும்பத்தினர் சந்திக்க தடை விதிக்கப்பட்டது.

தற்போது கொரோனா பரவல் குறைவடைந்திருப்பதால், கடந்த 16 ஆம் திகதி முதல் கைதிகளை அவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள், சட்டத்தரணிகள் நேரில் சந்திக்க அனுமதி வழங்கப்படுகின்றது.

இதனால், 4 மாதங்களுக்கு பின்னர் வேலூர் பெண்கள் சிறையில் நேற்று காலை நளினி-முருகன் சந்திப்பு நடைபெற்றது. காலை 9.15 முதல் 9.45 மணி வரை 30 நிமிடங்கள் நளினியை நேரில் சந்தித்து முருகன் பேசினார். அதன் பின்னர் முருகன் மீண்டும் ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரண்டால் பா.ஜ.க. அரசாங்கத்தை அகற்ற முடியும்

## போராட்டத்தில் இணையுமாறு வீரமணி அழைப்பு



சென்னை, ஒக 23

“மத்தியில் ஆட்சிசெய்யும் பா.ஜ.க.வைஅகற்ற அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒரே அணியில் திரண்டால் வெற்றி பெற முடியும்” என திராவிட கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அழைப்பு விடுத்துள்ளார்.

“மத்திய அரசுக்கு எதிராக அடுத்த மாதம் நாடு முழுவதும் போராட்டம் நடத்தவும் முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது” எனவும் வீரமணி குறிப்பிட்டிருக்கின்றார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:-

“2024இல் மத்திய ஆட்சியை, அப்போது நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் மாற்றுவதே சரியான தீர்வாக இருக்கும் என்பதை வலியுறுத்தி, காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியாகாந்தி காணொலி மூலம் ஒத்த கருத்துள்ள கட்சித்தலைவர்கள் கூட்டத்தை கூட்டியுள்ளார். இது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல; சரியான ஜனநாயக பாதுகாப்பு நடவடிக்கையும் ஆகும். 19 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்க உள்ளதில், தமிழ்நாட்டிலிருந்து தி.மு.க. தலைவர், முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் பங்கேற்கவுள்ளார்.

2024 தேர்தலுக்கான ஆயத்தமாக முதல் முயற்சியை இப்போதே தொடங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. மத்திய அரசுக்கு எதிராக அடுத்த மாதம் 20 முதல் 30 ஆம் திகதி வரை நாடு முழுவதும் போராட்டம் நடத்தவும் முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒரே அணியில் திரண்டால், வெற்றிதானே கனிவது உறுதி” என அவர் மேலும் கூறியுள்ளார்.

# பெண்களும் அர்ச்சகர்களாகலாம் என்பதை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும்

## கோரிக்கை முன்வைக்கின்றார் திருமாவளவன்



திருச்சி, ஒக. 23

”அனைவரும் அர்ச்சகராகலாம் என்ற தமிழ்நாடு அரசின் திட்டம், அரசியல் சாசனத்தின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக, பெண்களும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தை செயல்படுத்த வேண்டும்” , என விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருச்சியில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

“அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பது இந்தியாவில் மாபெரும் சமூகபுரட்சியாகும். ஆனால், இதனை எதிர்த்து பலரும் கூச்சலிடுகிறார்கள். இந்துக்கள் அல்லாத யாரும் அர்ச்சகராக முடியாது. அவ்வாறு ஒருவரும் நியமிக்கப்படவில்லை. ஆனால், இதை ஏற்க மறுத்து கடுமையான விமர்சனங்களை சிலர் முன்வைக்கின்றனர். நீதிமன்றத்திற்கு செல்வோம் என மிரட்டுகின்றனர். தி.மு.க. ஆட்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறார்கள்.

அனைவரும் அர்ச்சகராகலாம் என்ற தமிழ்நாடு அரசின் திட்டம், அரசியல் சாசனத்தின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக, பெண்களும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன்” எனவும் அவர் தெரிவித்தார்.

# மாநிலங்களவை தி.மு.க. வேட்பாளர் அறிவிப்பு

சென்னை, ஒக. 23

தமிழகத்தில் செப்ரெம்பர் 13 ஆம் திகதி நடைபெறும் மாநிலங்களவைத் தேர்தலில் தி.மு.கவின் வேட்பாளராக எம்.எம்.அப்துல்லா போட்டியிடுவார் என்று முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் நடந்து வரும் பட்ஜெட் கூட்டத் தொடர் செப்ரெம்பர் 21 ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மாநிலங்களவை தேர்தல் செப்ரெம்பர் 13 ஆம் திகதி நடைபெறும் என தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதையடுத்து, சட்டப்பேரவை கூட்டத் தொடரின் நாட்களைக் குறைத்துக்கொள்ள முடிவு எடுக்கப்பட்டு செப்ரெம்பர் 13 ஆம் திகதி வரை கூட்டத்தொடரை நடத்த தமிழக அரசு திட்டமிட்டது.

அ.தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினராக இருந்த முகமது ஜான் காலமானார். இதைத்தொடர்ந்து, அவரின் இடத்தை நிரப்பும் வகையில் தலைமை தேர்தல் ஆணையம் தேர்தலை அறிவித்துள்ளது.

# தவறான தகவலை பரப்புவது பயங்கரவாத செயலே ஆகும்!

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம



கண்டி, ஒக. 23
நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை தொடர்பில் தவறான தகவல்களை பரப்பிய சில நபர்கள் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.
கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய இராஜாங்க அமைச்சர், கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு மத்தியில் தவறான தகவல்களை பரப்புவது மற்றும் பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவது பயங்கரவாத செயல் என்று கூறினார்.
இவை சீர்குலைக்கும் செயல்கள் என்று அவர், விசாரணைகளைத் தொடங்க பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். (ஐ)



# ஊரடங்கை மீறி நடமாடியோருக்கு யாழ். நகரில் கட்டாய அன்ரிஜென்!

யாழ்ப்பாணம், ஒக.23
**தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி யாழ்ப்பாணம் நகரில் நடமாடியவர்களுக்கு கட்டாய அன்ரிஜென் பரிசோதனை நடத்தப்பட்டது.**
நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமை இரவு 10 மணி முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஊரடங்கு சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
இந்த நிலையில், ஊரடங்கு சட்டத்தை மீறி நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நகரில் நடமாடியவர்களுக்கு கட்டாய அன்ரிஜென் பரிசோதனை நடத்தப்பட்டது.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையில் யாழ். பிரதேச செயலர், பொலிஸார், இராணுவத்தினரும் இணைந்து செயல்பட்டனர். (ஐ-03)

# எரிவாயு தட்டுப்பாடு இன்றுடன் நீங்கும்!

## நுகர்வோர் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஒக. 23
நாட்டில் நிலவும் சமையல் எரிவாயு பற்றாக்குறை இன்று திங்கட்கிழமை முதல் தீர்க்கப் படும் என்று கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.
நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஆகியோர் எரிவாயு விநியோக நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் பின்னரே இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டது என்று அவர் கூறினார்.
லிட்ரோ எரிவாயு நிறுவனம் தற்சமயம் பழைய விலையிலும், லாஃப் எரிவாயு நிறுவனம் அதன் புதிய விலையிலும் விற்பனையில் ஈடுபடும் என்றும் அவர் கூறினார்.
இதன்படி நுகர்வோர் விவகார பாதுகாப்பு ஆணையகம் எரிவாயுவின் விலையை அதிகரிக்க இந்த மாதம் லாஃப் எரிவாயு நிறுவனத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலையை 1,856 ரூபாயாகும், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலையை 743 ரூபாயாகவும் உயர்த்துவதற்கு லாஃப் எரிவாயு நிறுவனத்துக்கு அனுமதி வழங்கியிருந்தது. லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் முன்னதாக அதன் எரிவாயு இறக்குமதியை நிறுத்தியதால் சந்தையில் கடுமையான எரிவாயு பற்றாக்குறை நிலவியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நேர்முக பரீட்சை இன்று நடைபெறாது

முல்லைத்தீவு, ஒக. 23
முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவாளர், விவாகப் பதிவாளர் பதவிகளுக்கான நேர்முகத் தேர்வு இன்று திங்கட்கிழமை நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இரத்தான நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் அறியத் தரப்படும் என, முல்லைத்தீவு மாவட்ட செயலக மேலதிக செயலாளர் க. கனகேஸ்வரன் தெரிவித்தார்.
நாட்டின் தற்போதைய கொரோனா நிலவரம் மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக இந்த நேர்முக தேர்வு இரத்தானதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் விதை நெல் தட்டுப்பாடு!

கிளிநொச்சி, ஒக. 23
கிளிநொச்சி மாவட்டத்தில், விதை நெல்லுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. சிறுபோக நெற்செய்கை கூடுதலாக விதை நெல் உற்பத்தியை இலக்காக கொண்டதாக இருந்தாலும், நெல்லை அறுவடை செய்தவுடன், பச்சை நெல்லாகவே விவசாயிகள் கூடுதலாக விற்பனை செய்து வருகின்றனர். இதன் காரணமாக. விதை நெல்லுக்கான நெருக்கடி காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.
சிறுபோக கூட்டங்களை நடத்துகின்ற அதிகாரிகள், விதை நெல் உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.
அதுமட்டுமன்றி, கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளாக போதிய நெல் உலர விடும் தளங்கள் அமைக்கப்படவில்லை, களஞ்சிய வசதிகள் இல்லை. இதனால், வீதிகளில் விவசாயிகள் நெல்லை உலர விடுகின்ற அவலம் காணப்படுகின்றது. அத்துடன், கூடுதலான விவசாயிகள் நெல்லை உலர விடாமல், நெல்லை அறுவடை செய்தவுடன், அவற்றை விற்பனை செய்கின்றனர்.
இந்த நிலைமை காரணமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் விதை நெல்லுக்கான நெருக்கடி தொடர்வதாக, அப்பகுதி விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# திரவ ஒட்சிசன் தேவையை பூர்த்தி செய்ய உதவுங்கள்!

## சீன தூதரிடம் பீரிஸ் கோரிக்கை



கொழும்பு, ஒக. 23
நாட்டின் திரவ ஒட்சிசன் தேவையை பூர்த்தி செய்ய உதவுமாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் சீனத் தூதுவரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். அத்துடன் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுகளுக்காக சீன அரசாங்கத்திற்கு இதன்போது நன்றியும் தெரிவித்தார்.
வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் சீன தூதுவர் குய் ஜென்ஹாங்கை சந்தித்துப் பேசினார். இதன்போதே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.
இந்த சந்திப்பு தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,
வெளிநாட்டு அமைச்சரின் புதிய நியமனத்திற்காக சீனத் தூதுவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.
இலங்கையின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கும், கோவிட்-19 தொற்றுநோயைத் தணிக்கும் முயற்சிகளுக்குமான சீனாவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டையும் அவர் வலியுறுத்தினார்.
கோவிட்-19 ஒத்துழைப்பு, மக்களுக்கு இடையேயான பரிமாற்றங்கள், பொருளாதார அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் பல்துறைசர் ஒத்துழைப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டதாக இந்தக் கலந்துரையாடல் அமைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதற் காக திரவ ஒட்சிசனை உடனடி யாக வழங்குவதற்கு சீனாவின் உதவியை வெளிவிவகார அமைச்சர் இதன்போது கோரினார். (ஐ)

# சிறுவர் இல்லத்தில் 26 பேர் உட்பட மன்னாரில் 46 தொற்றாளர்கள்!

மன்னார், ஒக. 23
மன்னார் மாவட்டத்தில் சிறுவர் இல்லத்தை சேர்ந்த 26 பேர் உட்பட 46 பேருக்கு கொரோனா தொற்று நேற்று முன்தினம் சனிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்டதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார்.
நேற்று காலை அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,
சனிக்கிழமை மன்னாரில் 46 தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். இவர்களில் 26 தொற்றாளர்கள் மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவன் அருள் இல்லத்தை சேர்ந்த சிறுவர்கள் மற்றும் கடமையாற்றுபவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
ஏனையவர்கள் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை, முருங்கன் மருத்துவமனை, அடம்பன் மருத்துவமனை, பேசாலை மருத்துவமனை, விடத்தல்தீவு மருத்துவமனை, மாந்தை மேற்கு மற்றும் நானாட்டான் சுகாதார மருத்துவமனை அதிகாரி பிரிவுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இந்த மாதம் முதலாம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை 399 கொரோனா தொற்றாளர்களும், இவ்வருடம் மாத்திரம் ஆயிரத்து 423 தொற்றாளர்களுமாக மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 440 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் வரை 13 கொரோனா மரணங்கள் பதிவாகின என்றும் உள்ளது.

# பொருளாதார மையங்கள் 24, 25 இல் திறக்கப்படும்!

## இராஜாங்க அமைச்சர் சஷீந்திர



கொழும்பு, ஓக. 23
நாடு முழுவதும் உள்ள அனைத்து பொருளாதார மையங்களும் எதிர்வரும் 24 மற்றும் 25ஆம் திகதிகளில் மொத்த வர்த்தகத்திற்காக திறக்கப்படும் என்று சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

வாரத்தில் இரு நாட்கள் அனைத்து பொருளாதார மையங்களும் திறக்கப்பட்டிருக்கும். ஆனால், பொது மக்கள் பொருள் கொள்வனவில் ஈடுபட முடியாது. மொத்த வியாபாரத்திற்காக மட்டுமே இவை திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2022 பெப்ரவரி வரை எரிபொருளை குறைந்த விலையில் பேணலாம்!

## அமைச்சர் பஸிலுக்கு நுகர்வோர் அமைப்பு கடிதம்

கொழும்பு, ஓக. 23
உலக சந்தையில் எரிபொருளின் விலை சடுதியாக குறைவடைந்தமையால் நாட்டின் எரிபொருளின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை எரிபொருளின் விலையை குறைந்தளவில் பேணுவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகிறது.

இவ்வாறு சுட்டிக்காட்டி நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

கடந்த மாதம் 11 ஆம் நாட்டில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டபோது உலக சந்தையில் எரிபொருள் பரல் ஒன்றின் விலை சுமார் 70.91 டொலராக இருந்தது. கடந்த மாதம் 30 ஆம் திகதி எரிபொருள் பரல் ஒன்றின் விலை 73.95 டொலராகக் காணப்பட்டது.

இதன் பின்னர் உலக சந்தையில் எரிபொருளின் விலை சடுதியாக குறைவடைந்தது. இதற்கமைய இந்த மாதம் 20 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில்உலக சந்தையில் எரிபொருள் ஒரு பரலின் விலை 62.14 அமெரிக்க டொலராக காணப்பட்டது.

நாட்டில் எரிபொருளின் விலை திருத்தப்பட்டதை தொடர்ந்து , உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்த வரையிலான காலப்பகுதியில் எரிபொருளின் விலை 8.77 அமெரிக்க டொலரினால் குறைவடைந்துள்ளது. இதனால் 12 சதவீத இலாபம் கிடைக்கப் பெற்றுள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# விரும்பும் தடுப்பூசிக்காக காத்திராது கிடைப்பதை விரைவாக பெறுங்கள்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்து



**கொழும்பு, ஓக.23**
**முதலில் கிடைக்கும் தடுப்பூசியை விரைவாக பெற்றுக் கொள்ளுங்கள். குறிப்பிட்ட கொரோனா தடுப்பூசிதான் வேண்டும் என்று தெரிவு செய்ய முயலாதீர்கள்", இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்த்தன மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

"மக்கள் சிலரிடையே தடுப்பூசியை தேர்ந்தெடுக்கும் போக்கு காணப்படுகிறது. கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி ஆய்வுகளின்படி, அனைத்து தடுப்பூசிகளும் வைரஸ் மற்றும் மாறுபாடுகளை எதிர்த்துப் போராடக்கூடியவை.

"ஒவ்வொரு நாளும் இந்த தொற்றுநோய் அதிகரித்து வரும் உலகில் நாம் வாழ்கிறோம். அத்துடன், அதிகமான மக்கள் உயிரிழக்கின்றனர். எனவே, இயல்பு நிலைக்கு திரும்புவதற்கான மிக விரைவானவழி விரைவாக தடுப்பூசி போடுவதாகும்.

"மக்கள் மற்றொரு தடுப்பூசிக்காக காத்திருந்தால், தடுப்பூசி எடுப்பதில் ஏற்படும் தாமதம் அவர்களின் தலைவிதியை தீர்மானிக்கும். கொரோனா மரணங்களை ஆராயும் போது, 60 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கே 70 முதல் 80% மரணங்கள் சம்பவித்துள்ளன.

எனவே, குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், வைரஸிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அருகிலுள்ள மையத்திலிருந்து முதலில்கிடைக்கக் கூடிய தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும் - என்றார்.(ஐ)

# எசல பெரஹறவில் பங்கேற்ற 45 கலைஞர்களுக்கு தொற்று

கண்டி, ஓக. 23
கண்டி- எசல பெரஹறவில் கலந்துகொண்ட நடனக் கலைஞர்கள் 45 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் கதிர்காமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நடனக் கலைஞர்கள் என்றும் இந்த குழுவில் 76 நடனக் கலைஞர்கள் காணப்படுகின்ற போதிலும் அவர்களுள் 45 பேருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டதாவும் தெரிவிக்கப்பபட்டது.

நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற ரந்தோலி ஊர்வலத்தின் பின்னர், அவர்களுக்கு அன்ரிஜென் பரிசோதனை செய்யப்பட்டதுடன், இதில் 45 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, அவர்கள் உடனடியாக பெரஹறவில் இருந்து விலக்கப்பட்டனர். அத்துடன், அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# 12 சிறுவர்கள் தொற்றுக்கு பலி!

கொழும்பு, ஓக. 23
கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் கொரோனா தொற்றினால் இதுவரை 12 சிறுவர்கள் உயிரிழந்தனர் என்று தெரிக்கப்பட்டது.

லேடி ரிஜ்வே மருத்துவமனையின் 20 தொடக்கம் 30 வரையான சிறுவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதாக பணிப்பாளர் டாக்டர் ஜி. விஜ யசூரிய தெரித்துள்ளார். (ஐ)

# அத்தியாவசிய சேவையை முன்னெடுக்க பொறிமுறையை உருவாக்க நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா



கொழும்பு, ஓக. 23
தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நடைமுறையிலுள்ள காலப்பகுதியில் மக்களுக்கு நெருக்கடிகள் ஏற்படாத வகையில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற் கான பொறிமுறையொன்றை மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோவிட்-19 பரவலை கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, மக்களுக்கு நெருக்கடிகள் ஏற்படாத வகையில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கான பொறிமுறையொன்றை மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய ஆலோசனைக்கமைய அரசியல்வாதிகளுடன் அரச அதிகாரிகள் இணைந்து செயல்படுகின்றனர்.

இந்த காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளை தடையின்றி முன்னெடுப்பதற்காக மாவட்ட மற்றும் கிராம மட்டத்திலும் , கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கோவிட்-19 பரவலைக் கட் டுப்படுத்துவதற்காக அரசாங் கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதற்கு மக்களும் முழுமையான ஒத்து ழைப்பை வழங்குவார்கள் என்று நம்புகின்றோம் - என்றார். (ஐ)

# வர்த்தக அனுமதி பத்திரங்களை பொலிஸ் நிலையம் வழங்காது!

## பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு



கொழும்பு, ஓக. 23
தனிமைப்படுத்தல் ஊரடங்கின் போது வர்த்தகத்துக்கான அனுமதிப்பத்திரங்கள் பொலிஸ் நிலையங்களால் வழங்கப்படாது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ அறிவித்துள்ளார்.

எனவே, அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்காக பொலிஸ் நிலையங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை அவர் வலியுறுத்தியுள்ளார்.

வர்த்தகத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவது மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் மூலம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# தினசரி 400 மரணங்கள் பதிவாகும் அபாயநிலை!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

**கொழும்பு, ஓக.23**

**சரியான பொறிமுறையை பின்பற்றவில்லை என்றால் நாளாந்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 400ஐத் தாண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

அந்த சங்கத்தின் நிர்வாகக் குழுவின் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தகவல் அளிக்கையில்,

“கோவிட் -19 நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் மரணங்கள் தொடர்பான தகவல்கள் குறித்து கடுமையான கவலைகள் எழுந்துள்ளன. மரணங்கள் மற்றும் நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை தெளிவாக இல்லை என்பதால் சரியான பாதை தெளிவாக இல்லை.

குறிப்பிட்ட அதிகாரிகள் தங்கள் கடமைகளை இறுக்கமாக நிறைவேற்ற வேண்டும், இதற்காக ஓர் அமைப்பு இருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் எதிர்காலத்தில் ஒரு முக்கியமான நிலைமை ஏற்படும். மரணங்களின் எண்ணிக்கை ஒருநாளைக்கு 400 ஆக உயரும் - என்றார். (ஐ)

# 39 தொன் ஒட்சிசனுடன் நாடு வந்தது சக்தி கப்பல்!



கொழும்பு, ஓக. 23

ஒட்சிசனை ஏற்றியபடி வந்த இந்திய கடற்படை கப்பலான சக்தி, நேற்று பிற்பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தியாவின் விசாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து, 39 தொன் ஒட்சிசனுடன் இந்தக் கப்பல் கடந்த 19ஆம் திகதி பயணத்தை தொடங்கியிருந்தது.

இதேவேளை, சென்னை துறைமுகத்தில் 39 தொன் ஒட்சிசனை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட இலங்கை கடற்படை கப்பலான சக்தி, நாட்டை நெருங்குகிறது என்று கடற்படை செய்தி தொடர்பாளர் கப்டன் இந்திகா டி சில்வா நேற்று மாலை கூறியிருந்தார். (ஐ)

# தெற்காசியாவில் இலங்கையிலேயே கொரோனாவால் உயிரிழப்பு அதிகம்

## தொற்றுநோயியல் பணிப்பாளர்

கொழும்பு, ஓக. 23

தெற்காசியாவில் மக்கள் தொகை அடிப்படையில் கோவிட் -19 உயிரிழப்புகளில் அதிக சதவீதம் இலங்கையில் உள்ளது என்ற தகவலை ஏற்றுக்கொள்வதாக தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர், மருத்துவர் சமித கினிகே தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

நாட்டில் கோவிட்-19 உயிரிழப்பு விகிதம் அதிகரிக்க பல காரணங்கள் உள்ளன. அனைத்து வசதிகளும் வழங்கப்பட்ட போதிலும், 60 வயதுக்கு மேற் பட்ட சிலர் இன்னும் கோவிட்-19 தடுப்பூசியைப் பெறவில்லை என்பது நாட்டில் கோரோனா வைரஸ் பரவுவதைக் குறைக்கும் செயல்முறைக்கு சவாலாக மாறியுள்ளது.

கோவிட்-19 தடுப்பூசி போடப்படாத 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் குறித்து நாடு முழுவதும் கணக்கெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது. செப்ரெம்பர் நடுப்பகுதியில் 18-30 வயதுக்குட்பட்ட அனைத்து நபர்களுக்கும் கோவிட்-19 தடுப்பூசி போடப்படும். வரும் வாரத்தில் தடுப்பூசி நிலையங்களை அணுகுவதில் சிரமம் உள்ளவர்களுக்காக அவர்களது வீடுகளுக்கே சென்று தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஆனந்த பாலித பிணையில் விடுவிப்பு



தேசிய ஊழியர் சங்கத்தின் பெற்றோலிய கூட்டுத் தாபன கிளையின் உப தலைவர் ஆனந்த பாலித நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு மேலதிக நீதிவான் லோச்சனி அபேவிக்ரம முன்னிலையில் முற்படுத்தப்பட்டவரை 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

இதன்போது, அரசியலமைப்பின் 14 (1) சரத்தின் கீழ் நாட்டு மக்களுக்கு கருத்து சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. உண்மைத் தகவல்களின் அடிப்படையில் வெளியிடப்படும் கருத்துகளை கூறுவது விளக்கமறியலில் வைப்பதற்கான விடயமல்ல என்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தினருக்கு நீதிவான் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் எரிபொருள் கையிருப்பு தொடர்பில் வெளியிட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஆனந்த பாலித நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டுக்கு ஆபத்தான உடன்படிக்கைகளில் பஸில் அமெரிக்காவுடன் கைச்சாத்திடலாம்

## அச்சம் தெரிவிக்கிறார் திஸ்ஸ விதாரண



கொழும்பு, ஓக. 23

“அமெரிக்காவுடன் ஆபத்தான உடன்படிக்கைகளில் நிதி அமைச்சராக இருக்கும் பஸில் ராஜபக்ஷ கைச்சாத்திடலாம் என்ற அச்சம் எனக்கு இன்னமும் உள்ளது”, என்று லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் வார இதழுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “இலங்கையின் நிதி அமைச்சராக பஷில் ராஜபக்ஷ இருக்கின்றார். இவருக்கு அமெரிக்க பிராஜாவுரிமையும் உள்ளது. இவர் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற்று முக்கிய தீர்மானங்கள் எடுக்க வல்ல நிதி அமைச்சு பொறுப்பை பெற்றுக்கொண்ட போது நாம் கடுமையாக எதிர்த்திருந்தோம்.

“டியாகோ கார்சியா தீவை மீண்டும் மொரீசியஸிடம் ஒப்படைக்குமாறு சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு வெளியிட்டுள்ளது. இதனால் அமெரிக்கா அங்கிருந்து வெளியேறும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அமெரிக்கா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிலைபெற இலங்கையை மையப்படுத்தி நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

“கடந்த ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவுடன் அக்ஸா உடன்படிக்கையை கைச்சாத்திட்டது. அத்துடன் அதன் தொடர்ச்சியாக எம். சி. சி., சோபா ஆகிய உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கும் திட்டமிட்டிருந்தது. இருப்பினும் 2019 நடைபெற்ற ஆட்சி மாற்றத்தால் அவ்விதமான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை.

“துரதிர்ஷ்டவசமாக எம். சி.சி.ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்குமாக இருந்தால் அமெரிக்காவின் பல்தேசிய நிறுவனங்கள் இலங்கையின் எப்பகுதியிலும் காணிகளைப் பெற்றுக்கொள்ளுமளவிற்கு அதிகாரங்களைப் பெற்றிருக்கும். தனித்துவச் சட்டங்களான தேசவழமை, கண்டியச் சட்டங்கள் அனைத்தும் செயலிழந்திருக்கும். புலமைச் சொத்துரிமையும் நீக்கம் பெற்றிருக்கும். அதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு கட்டுப்பட்டதாகி இருக்கும்.

“இதேபோன்று சோபா உடன்படிக்கை கைச்சாத்தியிருந்தால், அமெரிக்காவின் படைகள் எந்தவிதமான வீசா அனுமதியும் இன்றி சீருடைகள் மற்றும் ஆயுதங்களுடன் விமான நிலையங்கள் ஊடாகவே அல்லது துறைமுகங்கள் ஊடாகவே நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கும், அவர்கள் நிலைபெறுவதற்கு திட்டமிட்டிருந்த திருகோணமலை இயற்கைத் துறைமுகத்திற்கு சென்று தங்கியிருப்பதற்குமான அதிகாரத்தை வழங்குகின்றது.

“இவ்விதமான நிலைமைகள் ஏற்பட்டிருந்தால் எமது நாட்டால் எதனையும் கட்டுப்படுத்த முடியாத நிலைமையே தோன்றியிருக்கும். ஆனால், எதிர் காலத்தில் இவை நிகழ்ந்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட் டுள்ளது. நாட்டின் பொருளா தாரத்தை மையப்படுத்தி உடன்படிக்கைகள் கைச்சாத் திடப்பட்டால் இவ்விதமான நிலைமைகள் தோற்றம் பெறலாம் என்ற அச்சம் என்னுள் இன்னமும் நீடிக்கின்றது” - என்றார். (ஐ)

# யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளரை மிரட்டியவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவுக்கு தொலைபேசியில் மிரட்டல் விடுத்தவர் என்று கூறப்படுபவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜனாதிபதி செயலக அதிகாரி என தன்னை அறிமுகப்படுத்திய அந்த நபர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சிற்றுண்டி சாலையை நடத்துவதற்கான ஒப்பந்தத்தை தாம் முன்மொழிபவருக்கே வழங்கவேண்டும் என்று மிரட்டியுள்ளார்.

இந்த தொலைபேசி அழைப்பு கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மருத்துவமனை பதில் பணிப்பாளருக்கு வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா, யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கினார்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய, முதன்மை பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, தொலைபேசி அழைப்பு எடுத்தவர் நீர் கொழும்பில் வசிப்பவர் எனக் கண்டறிந்தார். அவரைக் கைது செய்வதற்கான விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த யாழ்ப்பாணம் பொலிஸார், பிடியாணை உத்தரவை பெற்றனர்.

சந்தேக நபரின் இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய, முதன்மை பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான பொலிஸ் குழுவின் சந்தேக நபரைக் கைது செய்து யாழ்ப்பாணம் அழைத்து வந்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். தற்போது நாட்டில் நிலவும் கோவிட்-19 பரவல் காரணமாக சந்தேக நபரை நிபந்தனையுடனான பிணையில் விடுவித்து வழக்கை ஒத்திவைத்தது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்காக கிடைக்கப் பெற்ற மூன்று விண்ணப்பங்களும் நிர்வாகத்தினால் நிராகரிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே பதில் பணிப்பாளருக்கு தொலைபேசி வழியாக மிரட்டல் விடுக்கப்பட்டது. (ஐ-3)

ஈழநாடு



# ஜெனிவா ஆரம்பமாக முன்னர் ஜனாதிபதியை சந்திப்பதற்கு சம்பந்தன் விரும்புவது ஏன்?

**“ 1978குப் பின்னர் புதிய அரசியலமைப்பை உருவாக்கு வோம் என்று தெரிவித்த எந்த அரசும் அதனைச் செய்யவில்லை. மைத்திரி - ரணில் கூட்டாட்சிக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முண்டு கொடுத்தும் நாலரை ஆண்டுகளில் அது நிறைவேறவில்லை. தற்போதைய கோட்டாபய அரசின் காலத்தில் இது நிறைவேறாது என்று தெரிந்தும் கோட்டாபயவை சந்திப்பதற்கு கூட்டமைப்பின் சம்பந்தன் ஆர்வம் காட்டுவது எதற்காக?**






**பனங்காட்டான்**

ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் பதவியேற்று ஒரு வருட முடிவில் அமைச்சரவை மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. நெருக்கடியான சூழலில் இந்த மாற்றம் அவர்களுக்குத் தேவைப்பட்டுள்ளது.

தொடரும் பேரிடர் இலங்கையை மயான பூமியாக்கியுள்ளது. நித்தம் நித்தம் மரணிப்போர் தொகை ஏறிச் செல்கிறது. ஓரிரு வாரங்களுக்கு முழுமையான முடக்கத்தை ஏற்படுத்துமாறு மருத்துவ தரப்பினர் கோரி வருகின்ற போதிலும் வரட்டுக் கௌரவம் அதற்கு இடமளிக்க மறுக்கிறது.

பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், கவனஈர்ப்புகள் நாடு முழுவதும் பரவியுள்ளது. மாணவர்களின் மெய்நிகர் கல்விப் போதனை முடக்கப்பட்டுள்ளது. விலைவாசி ஏறிக் கொண்டு போகிறது. ஏழை மக்களின் உணவாக ஒரு காலத்தில் கருதப்பட்ட பாண், இன்று பணக்காரர்களாலும் வாங்க முடியாதவாறு விசம்போல் விலையேறுகிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு.

சகல பிரச்னைகளுக்குமான நிவாரணமாக ஏழு அமைச்சர்களை சங்கீதக் கதிரைப் பாணியில் இடம் மாற்றியுள்ளார் ஜனாதிபதி கோட்டாபய.

ஆசிரியர் போராட்டங்களைத் தீர்க்க முடியாது தத்தளித்த கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜெனிவாவைக் கையாள்வதற்காக வெளிவிவகார அமைச்சராக்கப்பட்டுள்ளார். தினேஸ் குணவர்த்தன, கல்வி அமைச்சராகியுள்ளார்.

கொரோனாவிற்கு ஆயுர்வேத குடிநீரை சிபார்சு செய்து, நேர்த்திக் கடனை ஆற்று நீரில் குடநீரை ஊற்றி நிறைவேற்றிய சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராய்ச்சி, பஸ்ஸூம் ரெயிலும் ஓட்டுவதற்காக போக்குவரத்து அமைச்சராக்கப்பட்டுள்ளார். அமைச்சரவையில் இருந்த ஒரேயொரு பெண்ணான இவர் அழுதவாறே புதிய பதவியை ஏற்றுள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, கொரோனா ஒழிப்புக்கான புதிய சுகாதார அமைச்சராகியுள்ளார். காமினி லொக்குகே மின்சக்தி அமைச்சராகவும், டலஸ் அழகப்பெரும ஊடகத்துறை அமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர்.

கூட்டத்துடன் கூட்டமாக நாமல் ராஜபக்ஷவையும் ஜனாதிபதி கவனிக்கத் தவறவில்லை. இவருக்கு முன்னைய இரண்டு அமைச்சுகளுடன் புதிதாக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மேற்பார்வை அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

சிங்கள - பௌத்த மக்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வந்த நான் எப்போதும் அவர்கள் நலனைக் கவனிப்பேன் என்று அடிக்கடி கூறிவரும் ஜனா திபதி கோட்டாபய, அந்த மக்களின் வெறுப்புக்குரிய வராக மாறியுள்ளார். இவர்களை ஆட்சிக் கதிரைக்குக் கொண்டு வந்து ஏற்றியதன் ஊடாக தாங்கள் பெரும் பாவம் செய்து விட்டனரென பௌத்த பிக்குகள் பகிரங்கமாகக் கூறத்தொடங்கியுள்ளனர்.

மொத்தத்தில், தங்களைத் தெரிவு செய்து ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்த மக்களின் நம்பிக்கையை ஒன்றரை வருடங்களுக்குள் இழந்த முதலாவது ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ காணப்படுகிறார். போதாக்குறைக்கு ஆட்சித் தரப்பின் பங்காளிகளான பத்துக் கட்சிகளும் இவரை அங்கீகரிப்பவர்களாகக் காணப்படவில்லை. இதற்கிடையில் இன்னோர் அமைச்சரவை மாற்றம் விரைவில் வரப்போவதாக இராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ராஜாங்க அமைச்சர் சசீந்திர அறிவிப்புக் கொடுத்துள்ளதால் அதனை நம்ப இடமிருக்கிறது.

எத்தனை மாற்றங்கள் வந்தாலும் சவேந்திர சில்வா - கமால் குணரட்ண ஆகிய இராணுவ அதிகாரிகளே கோட்டாபயவின் இடமும் வலமுமாக இருப்பார்கள். முள்ளிவாய்க்காலை கையாண்ட பாணியில் சிங்கள பௌத்தர்களைக் கையாள்வதற்கான முன்னேற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளது.

இந்த நிலைவரத்தில், இலங்கைக்கான புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக சந்தித்து உரையாட சந்தர்ப்பம் கேட்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடிதம் அனுப்பியுள்ளார் கோட்டாபயவுக்கு.

கடந்த மாதம் 16ஆம் திகதி தங்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடான கூட்டம் இறுதி நேரத்தில் ரத்தானதைச் சுட்டிக் காட்டியுள்ள சம்பந்தன், புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் நடைமுறையை இனியும் தாமதிக்கலாகாது எனவும், இது தொடர்பாக உரையாடவும் நேரம் தருமாறு கடிதத்தில் கேட்டுள்ளார்.

இலங்கைக்கு பிரிட்டிஷார் சுதந்திரம் என்ற பெயரில் ஒற்றை இன ஆட்சியை வழங்கியதன் பின்னர் இரண்டு புதிய அரசியலமைப்புகள் - 1972இல் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியிலும், 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சியிலும் கொண்டு வரப்பட்டன. இதன் பின்னரான ஒவ்வொரு தேர்தல்களின்போதும் புதிய அரசியலமைப்பொன்று கொண்டு வரப்போவதாக சகல கட்சிகளும் அறிவித்து வந்தன.

1972இல் சிறிமாவோ அரசு உருவாக்கிய புதிய அரசியலமைப்பை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும், அப்போது எதிர்க்கட்சியாகவிருந்த ஜே.ஆர். ஜெய வர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியும் எதிர்த்து வாக்களித்தன.

1977 தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமக்குக் கிடைத்த 83 வீதமான பாராளுமன்ற பலத்துடன் 1978 இல் புதிய அரசியலமைப்பை உருவாக்கினார். அப்போது, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் சிறீலங்கா சுதந்திர கட்சியும் அதனை எதிர்த்திருந்தன. ஆக, மேற்குறிப்பிட்ட இரண்டு அரசியல் அமைப்புகளும் தமிழர் தரப்பால் மட்டுமன்றி, அப்போதிருந்த சிங்கள எதிர்க் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்படாதவை என்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

கடந்த 43 ஆண்டுகளாக ஆட்சிக்கு வந்த அனைத்துத் தரப்பினரும் ஜே.ஆரின் 1978 அரசியலமைப்பில் தங்களுக்குச் சாதகமான திருத்தங்களையே மேற்கொண்டுள்ளனர்.

கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் கோட்டாபயவின் பொதுஜன பெரமுன ஆட் சிக்கு வந்ததையடுத்து, அதன் அங்கு ரார்ப்பண நிகழ்வில் உரையாற்றும் போது அவர் என்ன சொன்னார்?

உடனடியாக பத்தொன்பதாவது அரசியல் திருத்தம் நீக்கப்பட்டு, ஒரு நாடு - ஒரு சட்டம் என்ற அடிப்படையில் புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படும் என்றார். அதேசமயம் இருபதாவது திருத்தமும் கொண்டு வரப்படும் என்பதற்கிணங்க கடந்தாண்டு ஒக்ரோபரில் மூன்றிலிரண்டு பெரும் பான்மையுடன் இருபதாவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. ரவூப் ஹக்கீம் - றிசாட் பதியுதீன் கட்சிகளைச் சார்ந்த முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவே மூன்றிலிரண்டை இதற்குப் பெற்றுக்கொடுத்தது.

இதன் அடுத்த கட்டமாக பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ, ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா ஆகியோர் தலைமையில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வரைபைத் தயாரிக்கவென குழுவொன்றை கோதபாய நியமித்தார். பல அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் குறிப்பிட்ட திகதிக்குள் தங்கள் ஆலோசனைகளை எழுத்தில் சமர்ப்பித்தன. பார்க்கும்போது எல்லாமே துரிதமாக நடைபெற்றதாயினும், அதன் பின்னர் எதுவுமே தொடரவில்லை. அது அப்படியே அமர்ந்துவிட்டது.

கடந்த மார்ச் மாதம் கொழும்பின் ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு செவ்வியளித்த விஜேதாச ராஜபக்ஷ, இந்த அரசாங்கத்தின் காலத்தில் புதிய அரசியலமைப்பு இடம்பெறாது என்று தெரிவித்திருந்தது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

2015இல் ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் கூட்டுத் தலைமையிலான அரசாங்கமும் புதிய அரசியலமைப்பை உருவாக்க உறுதியளித்திருந்தது. இதன் அடிப்படையிலேயே அரசாங்கத்துக்கு தாங்கள் ஆதரவளிப்பதாகவும், தமிழரின் அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பு நிச்சயம் வருமெனவும் கூட்டமைப்பு மீண்டும் மீண்டும் கூறிவந்தது. இதற்கென உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக் குழுவில் கூட்டமைப்பின் பிரதிநிதியாக சுமந்திரன் எம்.பி. இடம்பெற்றிருந்தார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்கி தமிழருக்கு அரசியல் தீர்வை பெற்றுத் தரவே தாம் எம்.பியாக இருப்பதாகவும், அது நிறைவேறியதும் தாம் அரசியலிலிருந்து விலகி விடுவதாகவும், இது நிறைவேறத் தவறினால் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அரசியலிலிருந்து நீங்கி விடுவதாகவும் சுமந்திரன் சொல்லி வந்தார்.

புதிய அரசியலமைப்பு வரவில்லை. அவரும் பதவி விலகவில்லை. அதன் பின்னரான கடந்த வருடத் தேர்தலிலும் குறைந்த வாக்குகளால் வெற்றிபெற்று, தொடர்ந்து சிங்கள ஆட்சித் தரப்புக்கும் தமிழர் தரப்புக்கும் இடையிலான தரகராகவே இயங்கி வருகிறார்.

அடுத்த மாதம் ஜெனிவா நகர்வு ஆரம்பமாகிறது. இங்கு இலங்கை எதிர்கொள்ளவுள்ள நெருக்கடியைத் தணிப்பதற்கு ஏற்கனவே சுமந்திரனுடன் அமைச்சர் பீரிஸ் பேச்சு நடத்தினார். இதன் அடுத்த கட்டமாக வெளிவிவகார அமைச்சராக பீரிஸ் பதவியேற்றுள்ளார். இதற்கு அடுத்த கட்டமாக கோட்டாபயவை சந்திப்பதற்கு கூட்டமைப்பின் தலைவர் கடிதம் எழுதியுள்ளார். இதற்கான வாய்ப்பை தேவை கருதி கோட்டாபய வழங்கும் சாத்தியமுண்டு.

அவ்வாறான சந்திப்பு இடம்பெறுமானால், பஸில் ராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ், சுமந்திரன் ஆகியோர் இதில் கலந்து கொள்வர் என நம்பலாம். சிலவேளை இந்தியத் தூதுவராகச் செல்லவிருக்கும் மிலிந்த மொறகொடவும் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

புதிய அரசியலமைப்பு விரைவில் வரும்போது தமிழரின் அரசியல் அபிலாசைகள் நிறைவேறும் என்ற ஜெனிவாவுக்கு எடுத்துக் கூறுவதற்கு கூட்டமைப்பினருடனான சந்திப்பை ஜெனிவாவில் இலங்கை அரசு பயன்படுத்தும். கடந்த ஆட்சிக் காலத்தில் மைத்திரி - ரணில் அரசை ஜெனிவாவில் பிணையெடுத்த கூட்டமைப்பு இப்போதும் அதனையே செய்ய விரும்புகிறதா? இதுவரை தூங்கிக் கிடந்த சம்பந் தனை துயிலெழுப்பி தமக்குத் துணை யாக சுமந்திரன் இணைத்துச் செல்வது சிங்களத் தலைமைகளுக்கு எப்போதும் போல் வாய்ப்பாகி விடும். தேர்தல் கால தமிழ்த் தேசிய மாற்றுத் தலைமைகளும் மாற்று அணிகளும் என்ன செய்கிறார்கள்? ■

# முடக்கல் நாட்களில் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் மேம்படுத்த தயாராகுவோம்

**வீட்டில் இருக்கும் காலப் பகுதியில் என்ன செய்வது என்பதைத் திட்டமிட்டுச் செய்வதற்கான சில ஆரோக்கிய ஆலோசனைகள்**



மருத்துவர் செ. போல்ரன் றஜீவ்

தொற்றுநோயின் மனஉளைச்சலில் இருந்து விடுபட்டு, குடும்பம் குடும்பமாக வீட்டில் இருக்கின்ற காலப்பகுதியில் எமது ஆரோக்கியத்திற்கான பல்வேறு நடைமுறைகளை பின்பற்றுவதிலும், பரபரப்பாக இயங்கிய தொழிலுக்குச் செல்லும் பெற்றோர்கள் தமது குழந்தைச் செல்வங்களுக்கு சிறந்த முன்மாதிரியாக வாழ்வதும் இன்று மிக முக்கியமானவொரு விடயமாகும் இதற்கான நல்ல சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திக்கொள்வோம்.

வேலை, வேலை என ஓடித்திரிந்த பெற்றோருக்கும், தனியே படிப்பு, படிப்பு என்ற ஓடித்திரிந்த பிள்ளைகளுக்கும், தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பாக வீட்டிலிருக்கும்படி செய்திருப்பது இந்த கோரோனாவின் ஒரு நல்ல விடயமாகவே நான் கருதுகிறேன். அப்படியே நீங்களும் எண்ணிக் கொள்ளுவதே சரியானதாகும். ஏனெனில், இன்றை எமது வாழ்க்கைமுறையானது, மேலைத்தேசக்கலாச்சாரப் பின்னணியில், ஒரே குடும்பத்தவர்களே ஒருவரை யொருவர் சந்தித்து பேசிக் கொள்ளும் சந்தர்ப்பம் மிகக் குறைவாகவேயுள்ளமை அனைவரும் அனுபவிக்கும் ஒரு கசப்பான உண்மையாகும்.

எனவே, கோவிட் தொற்று ஏற்பட்டு வீட்டில் தனியாக சுயதனிமைப்படுத்தலில் இருப்பவரும் சரி, தொற்று ஏற்பட்டு 14 நாட்கள் கடந்த பின்னர் குறிகுணங்கள் நீங்கி குணமானவரும் சரி அனைவரும் மேற்கொள்ளக்கூடிய பொதுவான விடயங்களையே நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அனைவரும் அதாவது வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் அதிகாலை 4.30 முதல் 5 மணிக்குள் கண்டிப்பாக நித்திரைவிட்டு எழும்ப வேண்டும். ஆனால், 3 வயதிற்குட்பட்டவர்கள் தாமதமாக எழும்பலாம் ஏனெனில், அவர்களுக்கு பகல் நித்திரையும் உண்டு. ஏனையவர்கள் கண்டிப்பாக பகல் நித்திரை கொள்ளக்கூடாது.

காலை 5 மணிமுதல் 6 மணிக்குள் மலசலங்கள் நீக்கி காலைக்கடன்களை முழுமையாக வெளியேற்றி குளித்துவிட வேண்டும். பின்னர், சூரிய வணக்கம் (சூரிய நமஸ்காரம்), யோகாசனங்கள் (அர்த்தகட்டி சக்ராசனம், உஷ்டாசனம், புஜங்காசனம், சக்ராசனம், பர்வட்டாசனம், யோகமுத்ரா) அல்லது உடற் பயிற்சி, நடைப்பயிற்சி பின்னர் மூச்சுப்பயிற்சிகள் (பஸ்திரிக்கா, பிரம்மரி பிராணாயாமம், நாடிசுத்தி பிராணாயாமம், கபாலபதி) அதன் பின்னரான சில வர்மப் புள்ளிகளின் அழுத்தம் (விலங்கு வர்மம், அடப்பகாலம், கைக்கவுளி வர்மம், உள்ளங்கை வெள்ளை வர்மம், திலர்த்தகாலம், கொண்டைக்கொல்லி வர்மம், சிப்பிவர்மம், புலிமுத்து அடங்கல், கால் கவுளி வர்மம்) என 20 நிமிடங்கள் முதல் 45 நிமிடங்கள் வரை மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பயிற்சியின் பின்னர் லேசான குளியல் அதாவது வியர்வையை நீக்கும் வகையில் மேல்கழுவிவிட்டு காலை பருகும் மூலிகைப்பானம் அருந்தவேண்டும். இஞ்சி சேர்க்கப்பட்டதாயின் மிகுந்த பயன் அளிக்கும். உதாரணமாக: எலுமிச்சம்பழம்- Citrus acida- 5 பழம், இஞ்சி- Zingiber officinale - 200 கிராம், புதினா - Mentha viridis- 1 பிடி, ஏலம் - Elacteria cardamomum- 10 கிராம், தேன் - Bee's honey- 2 அவுன்ஸ் (இது குடும்பத்திலுள்ள 05 நபருக்கான மொத்த அளவு) கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் நிலவேம்புக் குடிநீர் அல்லது கபசுரக்குடிநீர் போன்ற சித்த மருந்துகளையோ அல்லது மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட வேறு குடிநீர்களையோ பயன்படுத்த வேண்டும்.

பின்னர், 7.30 முதல் 08 மணிக்குள் காலையுணவு உண்ணவேண்டும். காலையுணவு மிகுந்த புரதச்சத்துள்ள தானியவகைகளாகவிருப்பது மிகச் சிறந்தது. அதாவது கடலை, பயறு, கௌபி, அரிசி மா பிட்டு, உழுத்தங்களி, உழுந்து இட்லி, தோசை, குரக்கன் பிட்டு, றவை உப்புமா போன்றன.

காலையுணவின் பின்னர் உங்களது தினசரி அலுவலக வேலையோ அல்லது படிப்போ தொடரலாம். பின்னர் 10-10.30 மணியளவில் மீண்டும் ஒரு மூலிகைப்பானம் குடிக்கலாம்.

மதிய உணவு 12.30 முதல் 1.30 மணிக்குள் சரிவிகித உணவாக உண்ண வேண்டும். மரக்கறியோ அல்லது மாமிச உணவோ அளவாக குடும்பத்தி லுள்ள அனைவரும் சேர்ந்து ஆறுதலாக உண்ண வேண்டும். உணவிற்குப்பின்ன ராக பழங்கள் உண்ணுவதை மதிய உணவிற்குப்பின்னர் அரை மணி நேரம் கழித்து உண்ணவும். பழங்கள் உண்ட பின்னர் உடனடியாக தண்ணீர் குடிக்கக்கூடாது.

மதியயுணவின் பின்னர் சிறு ஓய்வு எடுத்துக் கொள்ளலாமே தவிர நித்திரை கொள்ளக் கூடாது. குடும்பமாக இருந்து விளையாடும் விளையாட்டுக்கள் விளையாடலாம். பெற்றோர்கள் தமிழரின் பாரம்பரிய விளையாட்டுக்களான தாயம், ஏணியும் பாம்பும், பல்லாங்குழி போன்றவற்றை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

பின்னர் 3.00 மணிமுதல் 5.00 மணி வரை வீட்டுத் தோட்டம் அமைத்தலும் பராமரித்தலும் செய்யுங்கள். வீட்டுத் தோட்டத்தினுள் வெறுங்காலுடனும், வெறுங்கையுடனும் தோட்ட வேலைகளை மேற்கொள்ளுங்கள். ஏனெனில், இது உங்கள் தோட்டம் இதை சுத்தமாக வைத்திருக்க வேண்டியது உங்கள் கடமை உங்களுக்கோ அல்லது உங்கள் பிள்ளைகளுக்கோ ஏதாவது ஒவ்வாமை (allergic) ஏற்படும் பட்சத்தில் மட்டும் கால்களுக்கு செருப்போ, கைகளுக்கு கையுறையோ (gloves) பயன்படுத்தி வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்யலாம்.

மாலை 4.30 -5.00 மணிக்குள் இன்னொரு மூலிகைப்பானம் உதாரணமாக: அதிமதுரம்- Glyzarhiza glabra – 20 கிராம், சிற்றரத்தை - Abinia calcirata – 20 கிராம், ஆடாதோடை- Adathoda vasica – 01 கைபிடி, தூதுவளை- Solanum trilobatum - 01 கைபிடி, துளசி- Ocimum santum - 01 கைபிடி, பனை வெல்லம்- Palm jaggery – 10 கிராம் அனைத்துப் பொருட்க ளையும் எடுத்து உலர்ந்த சரக்குகளை அருவல் நொருவலாக தனித்தனியாக தூளாக்கியும், பச்சைச்சரக்குகளை சிறுசிறு துண்டாக வெட்டியும் எடுத்துக்கொண்டு, 04 டம்ளர் (120ml X 4 - 480 மிலி.) தண்ணீர் விட்டு, 01 டம்ளர் (120ml) தண்ணீராக சுண்டக்காய்ச்சி பயன்படுத்த வேண்டும். அல்லது மஞ்சள் மிளகு போட்ட பால் குடிக்கலாம்.

மாலை 5.00 - 6.00 மணிக்குள் வியர்க்குமளவிற்கு விளையாடுங்கள். பெற்றோர் பிள்ளைகளுடன் ஓடிப்பிடித்து, Badminton பந்தெறிதல் போன்ற விளையாட்டுக்களை விளையாடுங்கள். இதைவிட நடனமாடலாம், பாட்டுப்பாடலாம் யோகாசனங்கள் செய்யலாம். பின்னர், வியர்வை போகும் படியாக குளித்த பின்னர், வீட்டுக்கு சாம்பிராணி புகை போடுங்கள். இது நாம் மறந்து போய்க்கொண்டிருக்கும் எமது முன்னோரின் நல்ல பழக்கங்களில் ஒன்று. சாம்பிராணிக் குப்பதில் நீங்களே மூலிகைப்புகையைத் தயாரித்துக் கொள்ளலாம். உதாரணமாக: வெண் குங்கிலியம்- Shorea robusta – resin (ரெசின்), அகில்- Aquilara lignum – கட்டை, தேவதாரு- னுநனசரள deodara – கட்டை, மஞ்சள்- Curcuma longa – வேர்தண்டுக்கிழங்கு, நொச்சி- Vitex negundoo - இலை, வேம்பு- Azadirachyta indica – விதை போன்ற மூலிகைகளை உலர வைத்து தனித்தனியாக அருவல்நொருவலாகப் (நுண்ணிய பொடியாக அல்ல) பொடியாக்கிக் கொள்ள வேண்டும். பொடியாக்கிக் கொண்ட அனைத்து மூலிகைகளிலும் சமஅளவு எடுத்து ஒன்றுசேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும். சிரட்டைக்கரி அல்லது கரி எடுத்து எரியூட்டி, தணலில் பொடியாக்கிய மூலிகைகளை சிறிது சிறிதாக தூவி புகையை வீட்டினுள்ளே பிடிக்கவேண்டும். வீட்டனுள் புகைபோட்டதன் பின்னர் வீட்டைவிட்டு வெளியே செல்வதைத்தவிர்த்துக்கொள்ளவும்.

பின்னர், தொலைக்காட்சி பார்க்கலாம் அல்லது வீட்டுக்குள் இருந்தபடியான சிறு பொழுதுபோக்குகள் செய்யலாம். அனைவரும் சேர்ந்து இராவுணவு சமைக்கலாம். கையடக்கத் தொலைபேசியை முக்கியமான விடயத்திற்காக மட்டும் பயன்படுத்தவும் அதில் உள்ள எந்தவொரு பொழுது போக்கம்சத்தையும் வைக்காதீர்கள். கிழமையில் ஒருமுறைமட்டும் குடும்பமாக தெரிவுசெய்த நல்ல திரைப்படம் பாருங்கள். வீட்டிலிருக்கும் நாட்களில் எந்த தொலைக்காட்சி நாடகங்களையும் பார்க்காதீர்கள். அவை உங்களை தொடர்ந்து பார்க்கச்செய்ததோடு, நீண்ட நாட்களின் பின் உங்கள் எண்ணங்கள் சிந்தனைனகளில் அதிலுள்ள கதாபாத்திரம் பிரதிபலிக்கச்செய்யும்.

இரவு 6.30-7.30 மணிக்குள் இராவுணவு உண்ணுங்கள். இது இலகுவாக சமிபாடடையக்கூடிய தானதாக இருக்க வேண்டும். உதாரணமாக: அப்பம், இடியப்பம், றொட்டி, பச்சரிசி தோசை போன் றவை. பின்னர் படுக் கைக்குப் போகும் முன் கடுக்காய்த்தோல் வெந்நீர் ஊறல் குடிநீர், கொத்தமல்லி குடிநீர் போன்றவற்றைக் குடித்து 9.30 முதல் 10.00 மணிக்குள் நித்திரையாகி விட வேண்டும்.

இதை தொடர்ச்சியாக 21 நாட்களுக்குப் பின்பற்றினால் நாம் உடல் ஆரோக்கியத்துடனும், மனமகிழ்ச்சியுடனும் நீண்ட நாட்கள் வாழலாம் என்பது உண்மையே.

குடிக்கின்ற தண்ணீரினுள் வெட்டப்பட்ட அருநெல்லிக்காய், துளசியிலை, கொய்யா இலைத்துளிர், வில்வம்பூ போன்றவற்றை பொட்டு வைத்து தினமும் 3 லீற்றர் தண்ணீர் குடிப்பதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

அன்றாட மூன்றுவேளை உணவுகளை கிழமைக்கு திட்டமிட்டு பயன்படுத்தவும் அதேபோல் பழச்சாறுகளையும் திட்டமிட்டு, எலுமிச்சம் பழம், தோடம்பழம், கொடித்தோடைப்பழம், வெள்ளரிப் பழம், வத்தகைப்பழம், திராட்சைப்பழம், போன்றவற்றை பருவகாலங்களுக்கேற்ப அவை கிடைக்கக்கூடிய காலத்தில் அவற்றின் சாற்றை உடனே எடுத்துப்பயன்படுத்துங்கள். வீட்டுத்தோட்டங்களில் பழவகைகளை நட்டுப்பராமரித்துப் பயன்படுத்துவது சிறந்த ஆரோக்கியப் பொழுதுபோக்காகும்.


வீட்டிலுள்ள பொருட்களை ஒரு கிழமைக்கு ஒருமுறை இடம் மாற்றுவது மற்றும் வீட்டில் கதவு, யன்னல்கள், கதிரை, கட்டில் மெத்தைச் சீலைகளை என்பனவற்றை மாற்றுங்கள் இப்படிச் செய்வது ஒரு புதிய கிழமையைத் தொடங்குவதாக ஒரு புத்துணர்வு பெறுவதாக இருக்கும் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றது. இவ்வாறாக வீட்டில் இருக்கும் நாட்களில் என்னுடையதும், எனது குடும்பத்தினதும் ஆரோக்கியமான நீண்ட ஆயுளை மேம்படுத்த இன்றே தயாராகுவோம்! ■

**கட்டுரையாளர் சுதேச வைத்தியத் திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை.**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I, II
நேரம் : 1 மணித்தியாலம்

37. **பற்சில்லு A ஆனது 1 தடவை சுழலும் போது பற்சில்லு B ஆனது 7 தடவைகள் சுழலும். எனவே பற்சில்லு B 63 தடவைகள் சுழலும்போது பற்சில்லு A சுழலும் தடவைகளின் எண்ணிக்கை யாது?**




1) 9     2) 8     3) 7

38. **பின்வரும் சம்பவத்தை ஒழுங்குபடுத்தினால் அமையும் விடை யாது?**

A - சாயம் போடுதல்

B - தேநீர் குடித்தல்

C - நீரைக் கொதிக்க வைத்தல்.

D - கோப்பையினுள் சாயம், சீனி, சுடுநீர் ஆகியவற்றைக் கலத்தல்.

E - பாத்திரங்களைக் கழுவுதல்.

1) CADBE     2) BEACD     3) ECADB

39. 50 வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரம் ஒன்றில் ஒரு வினாவிற்குச் சரியாக விடையளித்திருப்பின் 2 புள்ளிகளும் தவறான விடையளித்திருப்பின் மேலதிகமாக 1 புள்ளியும் கழிக்கப்படும். மாணவன் ஒருவர் 79 புள்ளிகளைப் பெற்றிருப்பின் எத்தனை வினாக்களுக்குச் சரியாக விடையளித்திருப்பான்?

1) 43     2) 45     3) 38

40. **மறைந்துள்ள சொல்லை இனங்கண்டு சரியான விடையினைத் தெரிவு செய்க.**

வண்டியில் உண்டு கண்டியில் இல்லை.
மனதில் உண்டு மணத்தில் இல்லை.
கம்பத்தில் உண்டு கப்பத்தில் இல்லை.

1) கத்தி     2) வனம்     3) கனம்

01) **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

காட்டில் சிங்கம் ஒன்று மனிதன் விரித்த வலையில் விழுந்து துடித்தது. ஒரு நுளம்பு பறந்து வந்து சிங்கத்தின் மூக்கில் கடித்தது. சிங்கம் நுளம்பைப் பார்த்துக் கர்ஜித்து மிரட்டியது.

"உனக்கென்ன தைரியம்? சிங்கராஜாவையே கடிக்குமளவுக்கு தைரியம் உனக்கு எப்படி வந்தது?

நுளம்பு பவ்வியமாகக் கூறியது.

"மனிதன் விரித்த வலையில் நீ விழுந்து கிடக்கிறாய்! ஆனால் மனிதனோ எனக்குப் பயந்து வலைகட்டி அதற்குள் விழுந்து கிடக்கிறான்."

❖ **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

i) மனிதன் விரித்த வலையில் சிக்கியது எது?

.............................................................................

ii) வனத்தில் என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது?

.............................................................................

iii) இங்கு தரப்பட்டுள்ள முன்னிலை ஒருமைச் சொல் ஒன்றைக் குறிப்பிடுக.

.............................................................................

iv) பயனிலை அடைமொழிச் சொல்லை எழுதுக.

.............................................................................

v) இங்கு அதிக தடவைகள் இடம்பெற்றுள்ள நிறுத்தக் குறியின் பெயர் யாது?

.............................................................................

vi) கடிக்குமளவுக்கு என்பதனைப் பிரித்தெழுதுக.

.............................................................................

02. பின்வருவனவற்றுள் சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

1) தெடுதிரை     2) தொடுதிரை     3) தொடுதிறை

03. **பின்வரும் வாக்கியங்களில் உள்ள சரியான சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளியைப் பூரணப்படுத்துக.**

i) பவளக்கொடி.............................. விற்று வந்தாள். **(பாள், பாழ், பால்)**

ii) சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி ........ந்தன. **(ஒளி, ஒலி, ஒழி)**

iii) சுதந்திரதின விழாவின் போது...................... வேடிக்கைகள் காணப்பட்டன. **(வான, வாண)**

iii) காகம் அங்குமிங்கும் .................. தேடியது. **(இரை, இறை)**

ஈழநாடு
கல்வி tv CHANNEL

# மூன்றாவது தடுப்பூசியை செலுத்த ஜனாதிபதி பணிப்பு!

## இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 23

இலங்கை மக்களுக்கு மூன்றாவது கொரோனாத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

இதன்படி முதற்கட்டமாக சுகாதாரத்துறையினருக்கு மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற்கு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என வும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, செப்ரெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் நாடு முழுவதும் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இரண்டாவது தடுப்பூசியை வழங்கும் வேலைத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ளதாக கடந்த வெள்ளிக்கிழமை நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அத்துடன் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் செப்டெம்பர் மாதத்தில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் கண்ணுக்கு தெரியாத ஒரு பக்கம் உண்டு

## உண்மையை மறைக்க முயல்வோரை மங்கச் செய்வோம் என்கிறார் பேராயர்



**கொழும்பு, ஓக.23**

**"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் மேற்பரப்பில் தெரிவதைவிட கண்ணுக்குத் தெரியாத ஒரு பக்கம் இருப்பதாகத் தெரிகின்றது."**

- இவ்வாறு கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"இந்தத் தாக்குதலின் உண்மையை யாராவது மறைக்க முயன்றால், அவர்களை மங்கச் செய்து, அவர்களின் சக்தியைக் குறைத்து, மனச்சாட்சிக்கு ஆதரவாக நிற்கும் சக்தியைக் கொடுக்கும்படி கடவுளிடம் கேட்கின்றோம்.

இந்தத் தாக்குதலின் விவரங்களை மறைத்து கைகளைக் கழுவ முயன்றாலும் கடவுள் அதற்கு அனுமதிக்கமாட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று 28 மாதங்கள் ஆகியுள்ள நிலையில், அதற்குக் காரணமானவர்கள் யார் என்று வெளிப்படுத்தப்படவில்லை" - என்றார். (இ)

# விபத்தில் இருவர் மரணம்!

மொனராகலை, ஓக. 23

மொனராகலை மாவட்டத்தில் தனமல்வில - ஹம்பேகமுவ வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். அத்துடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் ஹம்பேகமுவ கொட்டவெஹெரமங்கட 1ஆம் மைல்கல் பிரதேசத்தைச் சேர்ந்த சந்தருவன் சங்கல்ப (வயது 16), இசுரு லக்ஸ்மன் பிரியதர்ஸன (வயது 17) ஆகியோரே உயிரிழந்தனர்.

குறித்த இருவரும் ஓட்டோவில் பயணித்தபோது ஓட்டோவானது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் ஓட்டோவின் சாரதி உட்பட மூவரும் படுகாயமடைந்த நிலையில் ஹம்பேகமுவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இளைஞர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டிய ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்படும்போது உயிரிழந்தனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஓட்டோ சாரதி அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (இ)

# 42 மதுபான போத்தல்களுடன் மாலம்பேயில் இருவர் சிக்கினர்

மாலம்பே, ஓக. 23

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலிலுள்ள நிலையில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக விற்பனைக்காகக் கொண்டுச் செல்லப்பட்ட ஒரு தொகை மதுபானப் போத்தல்களுடன் இருவரை மாலம்பேயில் வைத்து மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 31 ஆயிரத்து 500 லீற்றர் மதுபானம் அடங்கிய 42 போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனது சில்லறைப் பெறுமதி 84 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவு அமுலிலுள்ள காலப்பகுதியில் இதனை விற்பனை செய்யும் நோக்கிலேயே குறித்த இருவரும் அனுமதிப் பத்திரமின்றி மதுபானப் போத்தல்களைக் கொண்டு சென்றுள்ளனர். மாலம்பே பிரதேசத்தைச் சேர்ந்த 35, 40 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

# தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறிய மேலும் 452 பேர் சிக்கினர்

கொழும்பு, ஓக. 23

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 452 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த ஒக்ரோபர் முதல் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைதானவர்களின் மொத்த எண்ணிக்கை 56 ஆயிரத்து 294 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குப் பிரவேசிக்கும், அங்கிருந்து வெளியேறும் 13 இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளில் 639 வாகனங்களும், 1, 128 நபர்களும் நேற்றுமுன்தினம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# கணவன் கழுத்து நெரித்து கொலை: மனைவி உள்ளிட்ட இருவருக்கு மறியல்

இரத்தினபுரி, ஓக. 23

இரத்தினபுரி மாவட்டம், தொடம்பே மண்டதெனிய பிரதேசத்தில் ஒரு பிள்ளையின் தந்தையை படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கொலையுண்டவரின் மனைவி உள்ளிட்ட இருவரை, எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, இரத்தினபுரி பிரதான நீதிவான் ஜனிதான ரோஸனி உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த இந்திக்க சமன்குமார (வயது 32) என்பவர் கடந்த மாதம் 30 ஆம் திகதி அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

ஆரம்பத்தில் அவர் கொரோனா வைரஸ் தொற்றினாலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், பிரேத பரிசோதனையில் அவர் தூக்க மாத்திரை உட்கொண்டும் கழுத்து நெரித்தும் படுகொலைச் செய்யப்பட்டார் என்று தெரியவந்துள்ளது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையை யடுத்து, குறித்த நபரின் மனைவியையும் மற்றுமொரு நபரையும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர்.

அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (இ)

# கொரோனாவுக்கு பயந்து வைத்தியசாலைக்கு செல்வதை தவிர்த்தால் உயிரிழக்கவே நேரிடும்

## கொழும்பு வைத்திய நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 23

கொரோனாத் தொற்றுக்குப் பயந்து பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஏதேனும் சுகவீனம் ஏற்பட்டால் வைத்தியசாலைக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டாம் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் ஹர்ஷ சதீஷ்சந்திர அறிவுறுத்தியுள்ளார்.

மாரடைப்பு போன்ற தீவிர நோய் ஏற்படும்போது, வைத்தியசாலைக்கு விரைந்து செல்லாவிட்டால் துரதிர்ஷ்டவசமாக உயிரிழக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வைத்தியசாலைகளில் கொரோனா சிகிச்சைப் பிரிவுகள் தனியாக இயங்குவதால் அது தொடர்பில் மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, நீண்ட நாள் நோய் நிலைமையை உடையவர்கள் மற்றும் திடீர் நோய் நிலைமைக்கு உள்ளாகுபவர்கள் வைத்தியசாலைக்குச் செல்லத் தயங்க வேண்டாம் என்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் ஹர்ஷ சதீஷ் சந்திர மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# 150 இந்திய நாட்டவர்கள் தலிபான்களால் கடத்தல்

காபூல், ஓக. 23

காபூல் விமான நிலையத்திலிருந்து 150 இந்தியர்களை தலிபான்கள் கடத்தினர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தான் காபூல் விமான நிலையத்திலிருந்து 150 பேர் தலிபான்களால் கடத்தப்பட்டனர் என்றும் அவர்கள் அனைவரும் இந்தியர்கள் என்றும் உள்ளூர் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இருப்பினும், இச்செய்திக்கு தலிபான்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர். இந்தத் தகவலின் நம்பகத்தன்மை குறித்து அறிந்து கொள்ள இந்திய வெளிவிவகார அமைச்சு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய தூதரக அதிகாரிகள் மீட்கப்பட்ட நிலையில், அங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இந்திய உயரதிகாரிகள் தெரிவித்தனர். இதற்காக, சி 130ஜே, விமானம் தஜிகிஸ்தானில் தரையிறக்கப்பட்டுள்ளது. அதேசமயம் சி - 17 ரக விமானமும் தயாகராகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஆஸியில் பொது முடக்கத்திற்கு எதிர்ப்பு; போராட்டகாரர்கள் பொலிஸார் மோதல்!

சிட்னி, ஓக. 23

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன், சிட்னி நகரங்களில், முடக்கத்துக்கு எதிராக போராடும் ஆயிரக்கணக்கான மக்களும் பொலிஸாரும் மோதலில் ஈடுபட்டனர்.

மெல்பர்ன் நகரில் 4 ஆயிரம் பேர் பேரணி ஒன்றில் ஈடுபட்டனர். இவ்வாறு ஒன்றுகூடியவர்களை பொலிஸார் கலைத்தனர். இதற்காக பொலிஸார் மிளகு தெளிப்பான்களை பயன்படுத்தினர் என்று கூறப்படுகின்றது. இதைத் தொடர்ந்து இரு தரப்பாருக்கும் இடையே மோதல் வெடித்தது.

இந்த மோதலில் 7 பொலிஸார் காயமடைந்தனர் என்றும், 218 போராட்டக்காரர்களை பொலிஸார் கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், சிட்னி நகர முடக்கம் மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, அங்கு சுமார் ஆயிரம்



பொலிஸார் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிட்னியில் 825 தொற்றாளர்கள் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இது அவுஸ்திரேலியாவின் எந்தப் பிரதேசத்திலும் காணப்பட்ட தொற்றாளர்களை விட அதிகமாகும். சிட்னியிலும், ஆங்காங்கு மக்கள் கூடி எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர்.

எனினும், இங்கு சிறு தொகை மக்களே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். சிட்னியிலும் 41 பேரை பொலிஸார் கைது செய் துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களுக்கு 5 ஆயிரத்து 452 அவுஸ்திரேலியன் டொலர்கள் - சுமார் நம் நாட்டு மதிப்பில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படவுள்ளது. (ஐ)



# அமெரிக்கர்கள் தாக்கப்படலாம்; விமான நிலையம் வரவேண்டாம்

## ஆப்கான் அமெரிக்க படைகள் எச்சரிக்கை

காபூல், ஓக. 23

ஆப்கானிஸ்தானில் இருக்கும் அமெரிக்கர்கள் காபூல் விமான நிலையத்துக்கு வர வேண்டாம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. அங்கிருக்கும் ஐ. எஸ். அமைப்பினர் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்திலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காபூல் விமான நிலையத்துக்கு வெளியே பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருப்பதால், அங்கு வர வேண்டாம் என அமெரிக்கா சனிக்கிழமையே எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அரசாங்கம் பயணம் மேற்கொள்ளுமாறு கூறுபவர்கள் மட்டும் காபூல் வந்தால் போதும் எனக் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள்ஆப்கானில் சூழலை கண்காணித்து வருகின்றனர் எனவும், மாற்று வழிகள் குறித்து ஆலோசித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தலிபான்களால் பாதிக்கப்பட்டக் கூடியவர்களை ஆப்கானலிருந்தும் பாதுகாப்பாக வெளியேற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தங்கள் படையினர் மீது தாக்குதல் நடத்தினாலோ அல்லது இடையூறு விளைவித்தாலோ அதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார். (ஐ)

# ஆப்கானில் 3 மாவட்டங்கள் தலிபான் எதிர்ப்பாளர் வசம்

காபூல், ஓக. 23

வட ஆப்கானிஸ்தானில் மூன்று மாவட்டங்களை கைபற்றியுள்ளனர் என்று தலிபான் எதிர்ப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைக்க தலிபான்கள் மும்முரம் காட்டி வரும் நிலையில், பஞ்ஷிர் பள்ளத்தாக்கு அருகே உள்ள மூன்று மாவட்டங்களை கைப்பற்றினர் என்று தலிபான் எதிர்ப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

தலிபான்களுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜெனரல் பிஸ்மில்லா முகமது, “பஞ்ஷிர் பள்ளத்தாக்கு பகுதிக்கு வடக்கே அமைந்துள்ள பாக்லான் மாகாணத்தில் உள்ள தே சலே, பானோ மற்றும் பால்-ஹிசார் மாவட்டங்களை கைப்பற்றியுள்ளோம்” என ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

ஒரே வாரத்தில் ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்கள் அனைத்தையும் தலிபான்கள் கைப்பற்றியதை தொடர்ந்து, பல இடங்களில் பல்வேறு குழுக்கள் அவர்களுக்கு எதிராக இயங்கி வருகின்றன. ஆனால், வட ஆப்கானிஸ்தானில் உள்ள மூன்று மாவட்டங்களை கைப்பற்றிய குழுக்களின் தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

இதேவேளை, பாக்லானில் உள்ள பானோ மாவட்டம் உள்ளூர் இராணுவ படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று பொலிஸ் படைத்தலைவர் கூறியுள்ளார். (ஐ)



# அமெரிக்காவில் வெள்ளப்பெருக்கு 10 பேர் உயிரிழப்பு; 31 பேர் மாயம்!

வாஷிங்டன், ஓக. 23

அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தின் மத்திய பகுதிகளில் பெய்துவரும் கடும் மழை, வெள்ளப்பெருக்கால் இரு சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், 31 பேர் காணாமல் போயினர் என்று டென்னசி அவசர முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளத்தில் சிக்கி காணாமல் போனவர்களை தேடும் பணிக்கு உதவ சனிக்கிழமை இரவு ஓர் ஒருங்கிணைப்பு மையம் அமைக்கப்பட்டது.

மத்திய டென்னசியில் யாரேனும் வாகனங்களில் பயணம் செய்யவே அல்லது வெள்ளம் சூழ்ந்த வீதிகள் மற்றும் நடைபாதைகளைக் கடக்கவோகூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு முதல் பெய்துவரும் இடியுடன் கூடிய பலத்த மழை மேற்கு-மத்திய டென்னசி பகுதிகளுக்கு திடீர் வெள்ள அவசரநிலை அறிவிக்கப்பட்டது. (ஐ)

# கிரேஸ் சூறாவளி தாக்கம் மெக்சிக்கோவில் 8 பேர் பலி!



மெக்சிக்கோ சிற்றி, ஓக. 23

மெக்சிக்கோவை கிரேஸ் சூறாவளி தாக்கியதில் குறைந்தது 8 பேர் பலியாகினர். மூவரை காண வில்லை என்று தெரிவிக்கப்பட்டது. பலத்த மழை, பெரும் காற்றும் வெள்ளப்பெருக்கையும் ஏற்படுத்தின.

நேற்று முன்தினம் அதிகாலை மெக்சிக்கோ வின் வெரொக்ஸ் மாநிலத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதன்போது வீசிய புயலால் மரங்களும் வேரோடு சாய்க்கப்பட்டன.

மெக்சிக்கோவை கிரேஸ் சூறா வளி மணிக்கு 200 கி.மீற்றர் வேகத் தில் தாக்கியது. சூறாவளியால் உயிரி ழந்த 8 பேர்களில் 6 பேர் ஒரே குடும் பத்தை சேர்ந்தவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# 100 பந்துகள் கிரிக்கெட்: சம்பியன் வென்றது சௌதேர்ன் பிரேவ்!

லண்டன், ஓக. 23

அதிரடி நிறைந்த லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த 100 பந்துகள் கிரிக்கெட்டின் (ஆண்கள்) முதல் வெற்றிக்கிண்ணத்தை சௌதேர்ன் பிரேவ் கைப்பற்றியது. பர்மிங்ஹாம் பீனிக்ஸ் அணியை 32 ஓட்டங்களால் வெற்றி கொண்டதன் மூலமே சம்பியனை வென்றது சௌதேரன் பிரேவ்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிமுகப்படுத்தி நடத்திய 100 பந்து கிரிக்கெட் தொடர் லண்டனில் நடந்தது.

இதன் இறுதிப் போட்டியில் மொயீன் அலி தலைமையிலான பர்மிங்ஹாம் பீனிக்ஸ், ஜேம்ஸ் வின்ஸ் தலைமையிலான சௌதேர்ன் பிரேவ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மொயீன் அலி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

முதலில் ஆடிய சௌதேர்ன் அணிக்கு குயின்ரன் டி கொக், பௌல் ஸ்ரெர்லிங் தொடக்கம் கொடுத்தனர்.

கொக் 7 பந்துகளை எதிர்கொண்டு 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால், ஸ்ரெர்லிங் நிலைத்து ஆடினார். அவர் 36 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளை விளாசி 61 ஓட்டங்களை குவித்தார்.

பின்னர் வந்தவர்கள் றோஸ் வைற்லி 19 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளை பறக்கவிட்டு 44 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார்.

100 பந்துகள் நிறைவில் சௌதேர்ன் அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 168 ஓட்டங்களைக் குவித்தது.



பர்மிங்ஹாம் அணியின் பந்து வீச்சில் அடம் மிலன் 2 விக்கெட்களையும், இம்ரான் தஹீர், பென்னி ஹவ்வெல், லியம் லிவிங்ஸ்ரன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

169 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்ட ஆரம்பித்த பர்மிங்ஹாம் அணிக்கு தொடக்க வீரர்கள் கைகொடுக்கவில்லை. பெடிங்ஹம் 0, வில் ஸ்மீத் 2 ஓட்டங்களுடன் வீழ்ந்தனர்.

எனினும் அணித் தலைவர் மொயீன் அலியும், லிவிங்ஸ்ரனும் அணியை மீட்கப் போராடினர். அலி 30 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். லிவிங்ஸ்ரன் 19 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை விளாசி 46 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

100 பந்துகள் நிறைவில், பர்மிங்ஹாம் அணி 5 விக்கெட்கள் இழப் புக்கு 136 ஓட்டங்களையே பெற முடிந்தது. இதனால், 32 ஓட்டங்க ளால் சௌதேர்ன் அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

சௌதேர்ன் அணியின் பந்து வீச்சில் ஜோர்ஜ் கார்டன், ஓவர்ரொன், மில்ஸ், ஜேக் லின்டொட் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக பௌல் ஸ்ரெர்லிங்கும், தொடர் நாயகனாக லிவிங்ஸ்ரனும் தெரிவாகினர்.

இதேவேளை, சௌதேர்ன் பிரேவ் அணிக்கு இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் மஹேல ஜெயவர்த்தன பயிற்றுவிப்பாளராக செயல்படுகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ராஜஸ்தான் றோயல்ஸுடன் கிளென் பிலிப்ஸ் ஒப்பந்தம்!

புதுடில்லி, ஓக. 23

ஐ.பி.எல். இருபது - 20 தொடரின் இரண்டாவது பாகத்தில் விளையாடுவதற்காக ராஜஸ்தான் றோயல்ஸ் நியூஸிலாந்து வீரர் கிளென் பிலிப்ஸை ஒப்பந்தம் செய்துள்ளது.

ஜோஸ் பட்லருக்கு பதிலாகவே இவரை அந்த அணி ஒப்பந்தம் செய்தது. இரண்டாவது குழந்தை பிறப்பு காரணமாக ஜோஸ் பட்லர் ஐ.பி.எல்லின் இரண்டாவது பாகத்திலிருந்து விலகியுள்ளார்.

அடுத்த வாரம் மேற்கிந்தியத் தீவுகளில் நடக்கும் சி.பி.எல். தொடரில் பார்படோஸ் அணிக்காக பிலிப்ஸ் விளையாடவுள்ளார். இதைத் தொடர்ந்து செப். 19ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியுடன் பிலிப்ஸ் இணைவார்.

பிலிப்ஸ் இதுவரை தனது நாட்டுக்காக 25 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக அவர் 46 பந்துகளில் சதம் அடித்து சாதித்துள்ளார். அத்துடன், 100 பந்து கிரிக்கெட்டிலும் அவர் விளையாடினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ஐ.பி.எல்லில் விளையாட ஹசரங்க, சாமீர ஒப்பநதம்

கொழும்பு, ஓக. 23

இலங்கை கிரிக்கெட் அணியின் வனிந்து ஹசரங்க, துஷ்மந்த சாமீர ஆகியோர் ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் இந்தியாவில் நடந்தது. ஆனால், தொற்று பரவல் காரணமாக இந்தப் போட்டி இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தில் தொடரின் இரண்டாவது பாகம் செப். 19 - ஒக். 15 வரை நடக்கவுள்ளது. இதில் விளையாடுவதற்காகவே இந்த வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர, ஏ.பி.டி வில்லியர்ஸ், கிளென் மெக்ஸ்செல், டேனியல் கிறிஸ்டியன், டிம் டேவிட், கைல் ஜேமிசன் ஆகியோர் வெளிநாட்டு வீரர்களாக விராட் கோலி தலைமையிலான பெங்களூர் அணியில் பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிரிக்கெட் சபையின் ஒபந்தத்தில் 18 வீரர்கள் கையொப்பமிட்டனர்!



கொழும்பு, ஓக. 23

இலங்கை கிரிக்கெட் சபையின் வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் 18 பேர் கையொப்பமிட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய ஒப்பந்தம் எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடையும்.

இலங்கை கிரிக்கெட்டின் தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவுடன் இணைந்து இலங்கை கிரிக்கெட் சபை வடிவமைத்த ஒப்பந்தத்ததை அப்படியே ஏற்றுக்கொண்டு வீரர்கள் கையொப்பமிட்டனர்.

செயல்திறன், உடற்தகுதி, தலைமை, அனுபவ மூப்பு, தொழில்முறை, நடத்தை விதி மற்றும் எதிர்கால தழுவல் போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் வீரர்களுக்கான சம்பள ஒப்பந்தம் பரிந்துரைக்கப்பட்டது. இதில், மூத்த வீரரான ஏஞ்சலோ மத்தியூஸின் பெயர் இடம்பெறவில்லை.

இதேவேளை, தனுஷ்க குணதிலக, நிரோஷன் டிக்வெல்ல மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோருக்கு தடை விதிக்கப்பட்டமையால் அவர்களின் பெயரும் ஒப்பந்தத்தில் இடம்பெறவில்லை.

புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வீரர்களின் விவரம் வருமாறு,

தனஞ்சய டீ சில்வா, குசல் பெரேரா,

திமுத் கருணாரத்ன, சுரங்க லக்மால், தசூன் சானக, வனிந்து ஹசரங்க, லசித் எம்புல்தெனிய, பதும் நிஷாங்க, லஹிரு திரிமன்னே, துஷ்மந்த சாமீர, தினேஷ் சந்திமால், லக்ஷன் சந்தகன், விஷ்வ பெர்னாண்டோ, ஒஸத பெர்னாண்டோ, ரொமேஸ் மெண்டீஸ், லஹிரு குமார, அசென் பண்டார, அகில தனஞ்சய (ஐ)



## சின்சினாட்டி ரென்னிஸ் இறுதி போட்டியில் ஆஷ்லே

சின்சினாட்டி, ஓக. 23

உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டி சின்சினாட்டி ரென்னிஸின் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் மேற்கத்தேய தெற்கத்தேய ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில், சனிக்கிழமை இரவு நடந்த அரையிறுதிப் போட்டியில் ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரை ஆஷ்லே பார்டி எதிர்கொண்டார்.

இந்தப் புாட்டியில் 6 -2, 7 - 5 என்ற செற் கணக்கில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி இலகுவாக வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இந்த ஆண்டில் ஆஷ்லே பார்டி பங்கேற்கும் ஆறாவது இறுதிப் போட்டி இதுவாகும்.

# தோட்டத்தொழிலாளருக்கு தடுப்பூசியில் முன்னுரிமை

## வலியுறுத்துகின்றது தொழிலாளர் தேசிய சங்கம்

நுவரெலியா, ஓக. 23

கொரோனாத் தடுப்பூசிகளைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இன்று நாட்டில் கொரோனா பரவல் அதிகரித்து வருகின்றமையை அடுத்து நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாகவே கொரோனாவில் இருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மலையகத் தோட்டப் பகுதிகளில் தடுப்பூசிகளை மக்கள் பெற்றுக்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகும். நாம் ஏற்றுக் கொள்ளும் தடுப்பூசிகளின் பெயர்களில் மாத்திரமே வேறுபாடு உள்ளன. ஆனால், நோக்கம் ஒன்றாகவே உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்து தொழில் செய்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதில் சுகாதாரத் தரப்பினர் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

மலையகப் பகுதிகளில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களின் விவரங்களைத் தோட்ட நிர்வாகத்தினரும் இளைஞர், யுவதிகளும் ஏனைவர்களும், சுகாதார தரப்பினருக்கு அறிவிக்க வேண்டும்.

தடுப்பூசி வழங்கும் மத்திய நிலையங்களில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் சுகாதாரத் தரப்பினருக்கு மலையக இளைஞர், யுவதிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கொரோனா தொடர்பில் நாம் எப்போதும் விழிப்புடன் செயல்பட்டு எமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்" - என்றார். (இ)

# கொரோனா நிதியத்துக்கு அரச ஊழியரின் சம்பளமா?

## இன்னமும் தீர்மானம் இல்லை என்கிறார் பந்துல



கொழும்பு, ஓக.23

**"அரச ஊழியர்களின் சம்பளத்திலிருந்து ஒரு தொகையை கொரோனா நிதியத்துக்கு அறிவிடுவதற்கு இன்னும் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், அவ்வாறானதொரு தியாகத்தைச் செய்யுமாறு வேண்டுகோள் மட்டுமே விடுக்கப்பட்டுள்ளது."**

- இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாடு முடக்கப்படுமானால் அரச ஊழியர்களின் சம்பளத்திலிருந்து ஒரு தொகையை அறவிட வேண்டும் என ஆளுங் கட்சி உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். எனவே, அவ்வாறானதொரு தீர்மானத்தை அரசு எடுத்துள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அவ்வாறானதொரு தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. எனினும், நெருக்கடியான சூழல்களின்போது தியாகங்களைச் செய்ய நேரிடும். உதாரணமாக தாய்லாந்தில் நிதி நெருக்கடி ஏற்பட்டபோது அந்நாட்டிலுள்ள ஆன்மீகத் தலைவர்கள், விகாரைகளில் இருந்த தங்கங்களை மத்திய வங்கியிடம் ஒப்படைத்து தியாகம் செய்தனர்.

அதேபோல் வடக்கு, கிழக்கு போரின்போது நாடுகளும், தனிநபர்களும் நன்கொடைகளை வழங்கினர். "நமக்காக நாம்" நிதியத்துக்கு நானும் எனது பாராளுமன்ற உறுப்பினருக்கான சம்பளத் தொகையை வழங்கினேன். தற்போது நிதியத்துக்கும் சம்பளத்தை வழங்கியுள்ளேன். மேலும் சில அரசியல் பிரமுகர்களும் தம்மால் முடிந்த பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

எனவே, உதவி செய்யக் கூடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடமிருந்த அந்த உதவியை எதிர்ப்பார்க்கின்றோம். இதன்பிரகாரமே சம்பளத்தை ஒரு தொகையை வழங்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க யோசனை முன்வைத்துள்ளார். பொது முடக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவி வழங்குவதற்காகவே குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது" - என்றார். (இ)

# பெருந்தோட்ட அமைச்சும், கம்பனிகளும் இணைந்து நிவாரணம் வழங்கவேண்டும்

## வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

கண்டி, ஓக. 23

"அரசின் நிவாரணப் பொறிமுறைக்குள் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்கள் உள்வாங்கப்படாமல், தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலைமை தொடரக்கூடாது. எனவே, எமது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் விசேட வேலைத்திட்டத்தைப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சும், பெருந்தோட்டக் கம்பனிகளும் இணைந்து முன்னெடுக்க வேண்டும்."

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

"கொரோனா வைரஸ் தாக்கத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது அலைகளின் போதும் நாடு முடக்கப்பட்டது. அவ்வாறு முடக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் அரசால் 5 ஆயிரம் ரூபாய் நிதி நிவாரணம் வழங்கப்பட்டது. குறித்த நிவாரணத் திட்டத்தில் பல குளறுபடிகள் காணப்பட்டதுடன், பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு முறையாக வழங்கப்படவில்லை.

நகரங்கள் மற்றும் கிராமங்களைத் தாண்டி நிதி நிவாரணம் தோட்டப் பகுதிகளுக்கு வரவில்லை எனக் கூறுவதே மிகவும் பொருத்தமானதாக இருக்கும். இதனால் பலரின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

கொரோனாவின் மூன்றாவது அலை ஏற்பட்டுள்ள நிலையில் தற்போதும் நாடு முடக்கப்பட்டுள்ளது. ஆனால், மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிலைப்பாட்டில் அரசு இல்லை. தூரநோக்கு சிந்தனை இன்மையாலும், முறையற்ற முகாமைத்துவத்தாலும் நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

இதனால் வழியின்றி திண்டாடும் இந்த அரசு, நாட்டு மக்களையும் முழுமையாகக் கைவிட்டுள்ளது. "மக்கள் தியாகம் செய்ய வேண்டும். நாங்கள் ஒன்றும் வழங்கமாட்டோம்" என்ற தொனியிலேயே ஜனாதிபதியின் உரை கூட அமைந்தது.

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களுக்குக் கடந்த காலங்களில் வேலை நாட்கள் குறைக்கப்பட்டன. ஆயிரம் ரூபாய் கூட முறையாக வழங்கப்படவில்லை. அதே போல் பிற மாவட்டங்களுக்குத் தொழிலுக்குச் சென்றிருந்தவர்களும் தொழில் இழந்து வீடுகளுக்கு வந்துள்ளனர். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. பொது முடக்கமானது இதில் மேலும் தாக்கத்தைச் செலுத்தும்.

எனவே, நெருக்கடியான கட்டங்களில் எல்லாம் இந்நாட்டின் பொருளாதாரத்தைத் தோளில் சுமந்து, வருமானம் உழைத்துக் கொடுத்த பெருந்தோட்ட மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பெருந்தோட்டத்துறை அமைச்சுக்கும், பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் இருக்கின்றன.

இவ்விரு தரப்புகளும் இணைந்து விசேட நிவாரணத் திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். அதற்கான அவசர பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். தேயிலை சபையின் நிதி கடந்த காலங்களில் விளம்பரப் பிரசாரங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. அந்தச் சபையிலுள்ள நிதியைக்கூட தற்காலிகமாக நிவாரணத் திட்டத்துக்கு பயன்படுத்தலாம்.

பெருந்தோட்டப்பகுதிகளில் மரம் வெட்டுதல், சுற்றுலா உள்ளிட்ட இதர விடயங்களால் இலாபமாகப் பெற்ற பணத்தைக் தோட்டக் கம்பனிகளும் பயன்படுத்த வேண்டும். வெற்றிகரமான பொறிமுறை உருவாக்கப்படுமானால் எம்மாலும் நேசக்கரம் நீட்டக் கூடியதாக இருக்கும்" - என்றுள்ளது. (இ)

# பி.சி.ஆர். சோதனை முடிவு வரும்வரை வீட்டை விட்டு வெளியேற வேண்டாம்!

கொழும்பு, ஓக. 23

காய்ச்சல் உட்பட ஏனைய நோய் காரணங்களால் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வோர் இறுதிப் பெறுபேறு கிடைக்கும் வரை வீடுகளில் தங்கியிருக்க வேண்டும் என்று சுகாதாரத்துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

தற்சமயம் அதிக எண்ணிக்கையிலானோர் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்கிறார்கள். இவ்வாறு நோய் தொற்றுக்குள்ளாகி இறுதி அறிக்கை கிடைக்க முன்னர் தொழிலுக்குச் செல்பவர்களால் பாரிய பாதிப்பு ஏற்படலாம் என்றும் சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு மாநகர சபைக் குட்பட்ட பல இடங்களிலும் தற்சமயம் எழுமாற்று முறையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# 2000 ரூபாயையாவது முறையாக வழங்கவும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வேண்டுகோள்



நுவரெலியா, ஓக. 23

"கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக 10 நாட்களுக்கு நாடு முடக்கப்பட்டுள்ளது. இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. குறித்த வாழ்வாதாரக் கொடுப்பனவானது எவ்வித பாரபட்சமும் இன்றி வழங்கப்பட வேண்டும்."

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த முறை 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டபோது, சில அதிகாரிகள் தமக்குத் தேவையானவர்களுக்கே அந்தத் தொகையை வழங்கினர் என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. அதுமட்டுமல்ல போராட்டங்களை நடத்தியே 5 ஆயிரம் ரூபாயைப் பெற வேண்டிய நிலைமையும் காணப்பட்டது.

எனவே, இம்முறை அவ்வாறு நடைபெறக்கூடாது. உரிய பொறிமுறை உருவாக்கப்பட்டு 2 ஆயிரம் ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்" - என்றார். (இ)

## 4 விடயங்களில்...

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, அக்கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி., ரெலொவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., அக்கட்சியின் உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம் எம்.பி., குருசுவாமி சுரேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புளொட் தலைவர் சித்தார்த்தன் இதில் கலந்துகொள்வார் எனக் கூறப்பட்டது. எனினும், மெய்நிகர் உரையாடல்

இணைப்பு ஏற்பாடு சீரமைக்கப்படுவதில் சிக்கல் நேர்ந்தமையால் அவர் பங்குபற்ற முடியாமல்போனது.

ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக்கூடிய விடயங்கள், எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் மற்றும் தமிழ்த் தரப்பினரோடு அரசு முயற்சிக்கும் பேச்சு ஆகியவை முக்கிய விடயங்களாக இதன்போது பேசப்பட்டன.

ஏற்கனவே தமிழ்க் கட்சிகள் சந்தித்த கூட்டங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக் கூடிய விடயங்களை அடையாளப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பட்டியலிடப்பட்ட விடயங்களில் மிக முக்கியமாக, முதல் கட்டமாக ஒருமித்த நிலைப்பாட்டில் இணக்கம் காணப்படுவதற்கு நான்கு விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கை, அரசியல் கைதிகள் விடுதலை, தாயகப் பரப்பில் நடைபெறும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துதல் மற்றும் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக நடைமுறைப்படுத்த அரசையும் இந்தியாவையும் கோருதல் என்பவையாகும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை எம்முடைய தீர்வாக ஏற்க முடியாது. ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பது சாத்தியமில்லை என்பது அனைவருடைய நிலைப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் அரசமைப்பில் இருக்கக்கூடிய 13ஐ நிறைவேற்ற அரசு முன்வருவது நல்லிணக்க நடவடிக்கையாகக் கருத முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த விடயங்களில் காத்திரமாக ஒருமித்துச் செயலாற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதேவேளை, மற்ற விடயங்களையும் கட்டம் கட்டமாக ஒருமித்து எதிர்காலத்தில் முன்னெடுக்கவும் இணக்கம் காணப்பட்டது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக அரசுடன் பேச்சு நடத்துவது அவசியம். ஆயினும், அது தமிழ் மக்களின் நலன்களுக்காக அமைய வேண்டும் என்பதிலும் சர்வதேச அழுத்தங்களில் இருந்து அரசு தப்பிக்க இடமளிக்கக் கூடாது என்பதிலும் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என முடிவு எட்டப்பட்டது.

போருக்கு முன்னும் பின்னும் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்கும் பல பிரச்னைகளை முடிவுக்குக் கொண்டு வருவது அவசியமாகும். இது பேச்சுக்கான ஒரு நல்லிணக்க நடவடிக்கையாக அமைவதோடு சாதகமான சூழலையும் ஏற்படுத்தும். ஆகவே, சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் தமிழ்க் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில், மேல் குறிப்பிட்ட இணக்கம் காணப்பட்ட விடயங்கள் உட்பட மற்றும் பல விடயங்களையும் உள்ளடக்கிய கோரிக்கையை முன்வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வரவிருக்கும் ஐ.நா. கூட்டத் தொடரில் 46/1 தீர்மானம் சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது. இதன் பொருட்டு தமிழ்த் தரப்பினால் ஒருமித்து அறிக்கை ஒன்று தயாரித்து சமர்ப்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதில், 46/1 தீர்மானத்தில் உள்ள விடயங்களை அரசு நிறைவேற்றாமலும் அதேவேளை அவருக்கு எதிராகவும் செயற்படுவதைச் சுட்டிக்காட்டியும் குறிப்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் விபரங்களையும் உள்ளடக்குவது என்றும் இணக்கம் காணப்பட்டது.

முற்பகல் 11 மணி தொடக்கம் மூன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் மிக ஆரோக்கியமான முறையில் நடைபெற்றது எனவும், மீண்டும் விரைந்து சந்திப்பதற்கான ஒத்திசைவுடன் கலந்துரையாடல் நிறைவுபெற்றது எனவும் இதில் கலந்துகொண்டவர்கள் சார்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வடக்கில் 89...

இதில், 91 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 21 பேருக்கும், நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவில் 14 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 8 பேருக்கும், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் 4 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 4 பேருக்கும், சங்கானை மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் 3 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்குமென யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 64 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோன்று வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 16 பேரும், வவுனியா பொது மருத்துவமனையில் ஒருவரும், பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மன்னார் பொது மருத்துவமனையில் 5 பேருக்கும், முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தவிர, காங்கேசன்துறை கடற்படை முகாமில் இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## குருநகரில்...

பகுதியான குருநகர் - குருநகர் கடற்கரை வீதியில் திருச்சிலுவை சுகநல நிலையத்துக்கு அண்மையாக இடம்பெற்றது.

ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரை இரு மோட்டார் சைக்கிள்களில் துரத்தி வந்த நான்கு பேர் வாள்வெட்டு தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதில், படுகாயமடைந்த மூன்று பேரும் அந்தப் பகுதியை சேர்ந்தவர்களால் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மூவரில் ஒருவர் இரு கால்களிலும் படுகாயங்களுக்கு இலக்காகியுள்ளார் என்று தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து உடனடியாகவே குருநகர் பொலிஸ் காவலரணுக்கு தகவல் அளிக்கப்பட்டது. ஆனால், ஒரு மணி நேரம் கழித்தே சம்பவ இடத்துக்கு வந்தனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். அத்துடன், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட இருவரும் அந்தப் பகுதியை சேர்ந்தவர்கள் இல்லை என்றும் அவர்கள் கூறினர். (ஐ)

## 107 ஆண்கள்...

றனர்.

இதில் இரண்டு பெண்கள் 30 வயதுக்குட்பட்டவர். 27 ஆண்கள், 18 பெண்கள் என 45 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 136 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 107 ஆண்களும், 76 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 366 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# வழங்கப்பட்டுள்ள அனுமதியை துஷ்பிரயோகம் செய்யாதீர்கள்

### அத்தியாவசிய பணிகளில் ஈடுபடுவோருக்கு இராணுவ தளபதி சவேந்திர கடும் எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 23

"நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடுவோர் அதனை உறுதிப்படுத்த வேண்டும். அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை அவர்கள் துஷ்பிரயோகம் செய்வது சட்ட விரோத செயலாகும்."

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைக் கருத்தில் கொண்டு அவரின் உத்தரவுக்கிணங்க தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் ஆடைத் தொழில்கள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் மருந்தகங்களின் செயற்பாடுகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளன. தொழிலுக்குச் செல்பவர்கள் விசேட அனுமதி பெறத் தேவையில்லை.

எனினும், வீதிச் சோதனைகளில் ஈடுபடும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரிடம் உங்களது தொழில் ரீதியான அடையாள அட்டையை அல்லது அத்தியாவசிய சேவையுடன் தொடர்புடைய ஆவணத்தைக் காட்டி அதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்" - என்றார்.

இதேவேளை, ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள காலப்பகுதியில் எவ்வித அனுமதிப்பத்திரங்களும் பொலிஸாரால் வழங்கப்படாது என்றும், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோர் மாகாண மற்றும் மாவட்ட செயலாளர்களின் ஊடாகவே அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (இ)

## 2000 ரூபாய்...

சாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நிவாரணம் பெறத் தகுதியுடையவர்கள் குறித்த கணிப்பீடுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இவை குறித்த விபரங்கள் திரட்டப்பட்ட பின்னர் கொழும்புக்கு அனுப்பவுள்ளோம். அடுத்த திங்கட்கிழமை முதல் நிவாரண நிதியை கையளிக்கக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

## வான் - மோ....

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த டொல்பின் ரக வான் ஒன்றும் எதிர் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகின.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களில் ஒருவர் மரணமானார். மற்றொருவர் படுகாயமடைந்தார். படுகாயமடைந்தவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வானின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## முதல் தடவையாக...

ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும்18 ஆயிரத்து 769 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 42 ஆயிரத்து 159 ஆக உயர்வடைந்துள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## 4 டெல்டா...

திரிபுகளும் இலங்கையில் மட்டுமே பரவுகின்றது. இந்த திரிபுகளின் பரவலை கட்டுப்படுத்த முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறையின் தலைவர் பேராசிரியர் நீலிகா மாளவிகே தெரிவித்துள்ளார்.

"அதிக மருத்துவர்கள், மருத்துவமனைகள், சுகாதார வசதிகள் நிறைந்த மேல் மாகாணத்திலேயே நிலைமை மோசமாக இருக்கின்றது. இந்த நிலையில், வளங்கள் குறைந்த ஏனைய மாகாணங்களில் டெல்டா திரிபுகள் வேகமாக பரவினால் கற்பனை செய்ய முடியாத நிலைமை ஏற்படும்.

"பலரின் கோரிக்கையாலேயே நாட்டை அரசாங்கம் முடக்கியது. எனினும், நாடு முழுவதும் பெறப்பட்ட மாதிரிகளின் மரபணு வரிசை முறை சோதனை துயரத்தை அளிக்கிறது. காரணம், கொழும்பு, வவுனியா, கம்பஹா, களுத்துறை இரத்தினபுரி, மாத்தறை, மாத்தளை, நுவரெலியாவில் டெல்டா திரிபு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதேசமயம், கிழக்கு, வடமத்திய ஊவா மாகாணங்களில் மாதிரிகள் கிடைக்கவில்லை.

"டெல்டா மற்ற எல்லா மாகாணங்களிலும் இருப்பதால், அது நாடு முழுவதும் இருக்க வாய்ப்புள்ளது. எனவே, மாகாணங்களுக்கு இடையேயான கட்டுப்பாடுகளால் இப்போது எந்த நன்மையையும் பெற வாய்ப்பில்லை. இருப்பினும், டெல்டா இப்போது எல்லா இடங்களிலும் காணப்படுவதால், கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம், முடிந்தவரை மற்ற மாகாணங்களில் பரவுவதைக் குறைப்பது மிகவும் முக்கியம்.

டெல்டா பரவல், கொழும்பு மற்றும் கம்பஹாவுடன் ஒப்பிடும்போது மற்ற மாகாணங்களில் 4 முதல் 5 வாரங்கள் வரை காலதாமதம் இருக்கலாம். ஏனெனில், இந்த பகுதிகளுக்கு பின்னரே பரவியது. எனவே, மற்ற மாகாணங்களில் கட்டுப்பாடுகள் கடுமையாக இல்லை என்றால், மேல் மாகாணத்தின் நிலைமை மற்ற மாகாணங்களில் 4 முதல் 5 வாரங்களில் நடக்கலாம்.

நாட்டில் நான்கு வகையான டெல்டா திரிபுகள் பரவுகின்றன. இவற்றில் இரண்டு இலங்கையில் மட்டுமே பரவுகின்றன. இந்த திரிபுகள் தடுப்பூசி செயல்திறனில் எந்த விளைவையும் ஏற்படுத்த வாய்ப்பில்லை. இந்த திரிபுகள் குறித்த மேலதிக ஆய்வு மற்றும் வேகமாக பரவுவதோடு தொடர்புடையதா என்பதை அறிய நாங்கள் தற்போது பல சர்வதேச ஆய்வகங்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம். இந்தக் கேள்விகளுக்கான பதில்களைக் கண்டுபிடிக்க நேரம் எடுக்கும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## பதுளை வைத்தியசாலையில் ஒரே நாளில் ஏழு மரணங்கள்

பதுளை, ஓக. 23

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஏழு பேர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்று வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவின் விசேட மருத்துவர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணமடைந்தவர்களின் சடலங்கள், சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக பதுளை மாநகர சபையின் தகனசாலையில் நேற்று தகனம் செய்யப்பட்டுள்ளன என்றும் மருத்துவர் பாலித ராஜபக்ஷ மேலும் குறிப்பிட் டுள்ளார். (இ)

## வைத்தியசாலை பெண் ஊழியர் கொரோனா தொற்றால் மரணம்

மட்டக்களப்பு, ஓக. 23

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற் றும் பெண் ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தார்.

குறித்த ஊழியர் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார் என்று வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, கிரான்குளம் மத்தி பிரதேசத்தை சேர்ந்த என்ற 31 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான சுமைதன் கோபிதா என்பவரே உயிரிழந்தார்.

இவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சுகாதார ஊழி யராகக் கடமையாற்றியுள்ளார் எனவும் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு போதனா வைத் தியசாலை ஊழியர் ஒருவர் கொரோ னாத் தொற்றால் உயிரிழந்த முதலா வது சம்பவம் இதுவாகும். (இ)

## கல்லால் அடித்து ஒருவர் கொலை; 60 வயது பெண்ணுக்கு மறியல்

குருநாகல், ஓக. 23

குருநாகல் மாவட்டம், பொத்துஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியடோர்வத்த பிரதேசத்தில், நபர் ஒருவரைக் கல்லால் அடித்துப் படுகொலை செய்தக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பெண்ணை, எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த சுமித் இந்திரஜித் (வயது 43) என்ற குடும்பஸ்தரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய பெண்ணே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

### ஐ.தே.கவின் யோசனைகளை செயல்படுத்தியிருந்தால்

# மக்களிடம் கையேந்தும் நிலை அரசுக்கு வந்திருக்கமாட்டாது!

### ருவன் விஜயவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு,ஓக.23

**"கொரோனா வைரஸ் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த 21 முன்மொழிவுகளையும் நடைமுறைப்படுத்தியிருந்தால், அர்ப்பணிப்புக்குத் தயாராகுமாறு மக்களைக் கோரும் நிலைமை ஏற்பட்டிருக்காது."**

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

ஐ.தே.கவின் 75ஆவது ஆண்டு விழா தொடர்பான கலந்துரையாடல், இணையத்தளம் வழியாக நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"21 முன்மொழிவுகள் அடங்கிய யோசனைகள் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

ஆரோக்கியமான மற்றும் பொருளாதார ரீதியாக பாதுகாப்பான நாட்டை உருவாக்குவதற்கான திட்டங்களும் இதில் உள்ளடங்கியிருந்தன.

இந்த யோசனைகளை ஜனாதிபதி செயற்படுத்தியிருந்தால் ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பியிருக்கலாம்" - என்றார். (இ)

## டிக்கோயா வைத்தியசாலையில் 20 பேருக்கு கொரோனா!

ஹட்டன், ஓக. 23

ஹற்றன் - டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் நால்வர் உள்ளடங்கலாக 20 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



மருத்துவர்கள் நால்வர், தாதியர்கள் எழுவர், சிற்றூழியர்கள் ஒன்பது பேருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்கள் அனைவரும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மருத்துவர்கள் உள்ளடங்களாக 20 பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதால், வைத்திசாலையின் வழமையான நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (இ)

### கொரோனா தொற்றால்

# பிரபல விளையாட்டு வீரர்களான தந்தையும் மகனும் பரிதாப பலி

கொழும்பு, ஓக. 23

கொழும்பு றோயல் கல்லூரியின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் கல்லூரியின் கிரிக்கெட் கழக உறுப்பினருமான சுல்கி மொஹமட் மற்றும் அவரது தந்தையான மருதானை சாஹிரா கல்லூரியின் பிரபல ரக்பி வீரர் இப்ராஹிம் ஹமீட் ஆகியோர் இரண்டு நாட்களுக்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

கொழும்பில் வசித்து வந்த சுல்கி மொஹமட் நேற்றுமுன்தினமும், அவரது தந்தை இப்ராஹிம் ஹமீட் கடந்த வெள்ளிக்கிழமையும் உயிரிழந்துள்ளனர்.

1991 - 1992 காலப்பகுதியில் சுல்கி மொஹமட் கொழும்பு றோயல் கல்லூரியின் கிரிக்கெட் அணியில் விளையாடியிருந்த பிரபல வீரராவார். இவர் ஒரு விக்கெட் காப்பாளரும், சிறந்த துடுப்பாட்ட வீரரும் ஆவார்.

சுல்கியின் தந்தை இப்ராஹிம் ஹமீட் மருதானை சாஹிரா கல்லூரியின் பிரபல ரக்பி வீரராவார். 1971ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொலிஸ் ரக்பி அணிக்குத் தலைமை வகித்தவர். இவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக தனது பணியை நிறைவு செய்துள்ளார். இவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முன்னாள் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்தனவின் பிரதான பாதுகாப்பு அதிகாரியாகவும் செயல்பட்டார்.

தந்தையும் மகனும் சமீபத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர்.

ஒரு வாரமாக வைத்தியசாலையில் இருந்து சுல்கி மொஹமட் கடந்த 19ஆம் திகதி வீடு திரும்பியிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார். சுல்கியின் தந்தை இப்ராஹிம் ஹமீட் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கையில் 6 நாட்களுக்குள் 1,087 கொரோனா மரணங்கள்!

கொழும்பு, ஓக. 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் 6 நாட்களில் 1,087 பேர் உயிரிழந்தனர்.

கடந்த 15ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே குறித்த மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதன்படி 15ஆம் திகதி 167 பேரும், 16ஆம் திகதி 171 பேரும், 17ஆம் திகதி 170 பேரும், 18ஆம் திகதி 186 பேரும், 19ஆம் திகதி 195 பேரும், 20ஆம் திகதி 198 பேரும் உயிரிழந்தனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 20ஆம் திகதி வரை 7 ஆயிரத்து 183 பேர் மரணமடைந்தனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : சுப்பர் குறூப்-மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-படிக்காதவன்,ரஜினி
முருகன் ஆகிய திரைப்பட காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-சமுதாய வைத்திய நிபுணர்-
அமல் டினேஸ் கூஞ்ஞு
யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம்



7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாவர்களுக்கான
விவாத நிகழ்ச்சி இவ்வாரம் -சீதையின்
அக்கினிப்பரீட்சை இராமனின் கோழைத்
தனத்தை -சீதையின் கற்பை
பறைசாற்றுகிறது.



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

---

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு